விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: பத்து

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 ஆனி 24 சனிக்கிழமை (08.07.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 201

ராம்கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT RAMCO

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.

ராம்கோ சீமெந்து

# சர்வதேச அமைதிப்படை இலங்கைக்கு வரமாட்டா!

## கண்காணிப்புக்குழுத்தலைவர் தெரிவிப்பு

(ரொய்டர்)

**இலங்கைக்கு சர்வதேச அமைதிப் படைகள் வரும் வாய்ப்பு இருப்பதாக நான் நம்பவில்லை. இவ்வாறு யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் உல்ப் ஹென்றிக்சன் தெரிவித்துள்ளார்.**

ரொய்டர் செய்தி ஸ்தாபனத்திற்கு கருத்துத்தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் 'கண்காணிப்புக்குழுவினர் அமைதி காப்புக்குழுவினர் அல்ல. ஆனால் வன்முறைகள் குறைவதற்கு உறுதுணையாக இருப்பவர்கள். அவர்களின் எண்ணிக்கையை குறைப்பது தீங்காகலாம்.

'நாம் 60 பேர் ரெயாட்டோ பிக்கப் வாகனங்களில் சுற்றித்தீரிகின்றோம். நாம் இங்கே இல்லாதிருந்தால் நிலைமை எப்படி இருக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள். நிச்சயம் நிலைமை மோசமாகவே இருந்திருக்கும்.

'ஒப்பந்தத்தை முடிபுக்கு கொண்டுவருமாறு எந்தத்தரப்பும் இதுவரை கேட்டதில்லை. செப்ரெம்பர் மாதத்திற்கு முன்னர் கண்காணிப்பாளர்கள் வெளியேற வேண்டுமென விடுதலைப்புலிகள் கோரியுள்ளனர். (10 ஆம் பக்கம் பார்க்க)



## பெற்றோல் விலையை அதிகரிக்கக் கோரிக்கை

(கொழும்பு)

எரிபொருட்களின் விலையை மீண்டும் அதிகரிக்க வேண்டுமெனக்கோரி கனியவள அமைச்சரிடம் இலங்கை பெற்றோலிய கூட்டுஸ்தாபனம் பிரேரணை ஒன்றை சமர்ப்பித்துள்ளது.

ஒரு லீற்றர் பெற்றோல் 104 ரூபாவாக அதிகரிக்கப்பட வேண்டுமென பிரேரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் பெற்றோலின் விலையை அதிகரிப்பதற்கு இதுவரை தீர்மானிக்க வில்லை என கனியவள அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி தெரிவித்துள்ளார்.

எனினும் தற்போதைய நிலையில் மேலும் ஒரு மாத காலத்திற்கு பெற்றோலின் விலையை அதிகரிக்க முடியாது எனவும் அமைச்சர் பௌசி தெரிவித்தார். (ரு-5)

## கண்காணிப்புக் குழுத்தலைவர் பிராந்திய தலைவர்களுடன் சந்திப்பு

### புலிகளின் நிபந்தனை குறித்து ஆராய்வு

(கொழும்பு)

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் உல்ப் ஹென்றிக்ஷன் கண்காணிப்புக்குழுவின் பிராந்திய அலுவலகத் தலைவர்களைத் தம்புள்ள ஹொட்டல் ஒன்றில் சந்தித்துள்ளார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்ட கண்காணிப்புக்குழுவின் பிராந்திய அலுவலகத்தலைவர்கள் இந்த சந்திப்பில் கலந்து கொண்டதாக தெரியவருகிறது.

இச் சந்திப்பில் கண்காணிப்புக்குழுவில் உள்ள ஐரோப்பிய நாடுகளின் பிரஜைகள் செம்ரெம்பர் மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் விலகிக்கொள்ள வேண்டுமென புலிகள் விதித்துள்ள நிபந்தனைகள் குறித்து ஆராயப்பட்டுள்ளது.

அதேவேளை பிராந்திய பிரதிநிதிகளின் கருத்துக்களையும் ஹென்றிக்சன் கேட்டறிந்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ரு-5)

## ஜனாதிபதி- ரணில் முக்கிய சந்திப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையிலான விசேட சந்திப்பொன்று நேற்று முன்தினமிரவு நடைபெற்றுள்ளது.

இச் சந்திப்பின்போது சமாதான நடவடிக்கைகள் மற்றும் நாட்டின் தற்போதைய நிலை குறித்து விரிவாக கலந்தாலோசிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது. 18-வது அரசியல் அமைப்புத்திருத்தத்திற்கு ஐக்கிய தேசியக்கட்சியின் ஆதரவைப்பெறுவது தொடர்பாகவும் இந்தச்சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டது.

ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சுசந்த புஞ்சி நிலமே பிரதியமைச்சராக நேற்று முன்தினம் மாலை ஜனாதிபதி முன்னிலையில் (10 ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறையில் எறிகணை வீச்சு

(அம்பாறை)

அம்பாறையில் தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகப்பகுதியை நோக்கி பண்டயினர் சரமாரியான எறிகணைவீச்சுத்தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

தாண்டியடி சிறப்பு அதிரடிப்படை முகாமில் இருந்து நேற்று முற்பகல் 11.45 மணியளவில் இத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இத்தாக்குதலினால் பொதுமகன் ஒருவரின் வீடு சேதமடைந்தது. இதனிடையே அம்பாறை மாவட்ட அரசியல் துறையினரை அம்பாறை மாவட்ட (10 ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக சென்னையில் இன்று கூட்டம்

### அனைத்துக்கட்சிகளும் பங்கேற்பு

(சென்னை)

ஈழத்தமிழ் அகதிகளுக்கு ஆதரவு தெரிவித்து தமிழகத்தின் சென்னை, மயிலை மாங்கோவை என்னுமிடத்தில் அனைத்துக் கட்சிக்கூட்டம் ஒன்று இன்று நடைபெறவுள்ளது.

விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவர் திருமாவளவன் தலைமையில் இக் கூட்டம் நடைபெறவுள்ளது.

கூட்டம் தொடர்பாக திரைப்பட இயக்குநர் தங்கர் பச்சான் ஊடகங்களுக்குத் தெரிவிக்கையில், 30 வருடங்களாக துன்பப்படுகின்ற ஈழத்தமிழர்களுக்கு ஆதரவு தெரிவித்து இன்றைய கூட்டம் நடைபெறவுள்ளது.

இதில் இந்தியப்பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு மனுவொன்றை அனுப்பவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தமிழகத்தில் அரசியல் கட்சிகளிடம் ஒற்றுமையில்லை. (10 ஆம் பக்கம் பார்க்க)

# தொப்புள் கொடி உறவு தொடர வேண்டும்

## தமிழக தலைவர்களிடம் சிவாஜிலிங்கம் கோரிக்கை

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் இந்திய விஜயம் ஒன்றை மேற்கொண்டு தமிழ் நாட்டில் உள்ள



முக்கிய அரசியல் தலைவர்களையும், புத்திஜீவிகளையும், தமிழ்த் தேசிய உணர்வா ளர்களையும் சந்தித்து இன்றைய நிலையில் இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி விரிவாக விளக்கிக் கூறியுள்ளார்.

'தமிழக முதல் அமைச்சரும், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவருமான டாக்டர் கலைஞர் கருணாநிதியை தி.மு.க. தலைமைச் செயலகமான அறிவாலயத்தில் சந்தித்து சிவாஜிலிங்கம் எம்.பி. இலங்கைத் தமிழ் மக்களின் சார்பில் முதலமைச்சராகப் பொறுப் பேற்றுக்கொண்டமைக்கும், அவரது பிறந்த நாளுக்கு வாழ்த்துக்களையும் தெரிவித்து ஈழத் தமிழர்களின் துயர் துடைக்க உதவி செய்யுமாறும் வேண்டிக் கொண் டார்.

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் வைகோவை ம.தி. மு.க. தலைமைச் செயலகமான தாயகத்தில் சந்தித்து சிவாஜிலிங்கம் எம்.பி.இந்திய அரசாங்கம் இலங்கைக்கு எந்தவிதமான இராணுவ உதவிகளையும் வழங்கக் கூடாது என்று தொடர்ச்சியாகக் குரல் கொடுத்து வருவதற்கும் நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்தார்.

இதேவேளை, ஈழத்தமிழர்களின் பிரச்சினையில் தொடர்ந்து ம.தி. மு.க.உறுதியாகச் செயற்படும் என்றும் வைகோசிவாஜிலிங்கத்துக்கு உறுதியளித்தார். தமிழ்த்தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறனை சென்னையில் உள்ள அவரது இல்லத்தில் சிவாஜிலிங்கம் எம்.பி.ஈழத் தமிழர் போராட்டத்திற்கான முழு ஆதரவையும் தமிழகத்தில் வழங்கி நெறிப்படுத்தி வருவதற்காக ஈழத்தமிழர்களின் சார்பில் நன்றியறிதலையும் பாராட்டுக்களையும்தெரிவித்துக் கொண் டார்.

தொடர்ந்து சிவாஜிலிங்கம் எம்.பி. பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவன டாக்டர் ராமதாஸை சந்தித்தபோது ஈழத் தமிழ் மக்களைக் காப்பாற்ற பாட்டாளி மக்கள் கட்சி தொடர்ந்து குரல்கொடுக்கும் என்று டாக்டர் ராமதாஸ் உறுதிபடத் தெரிவித்தார். இந்தச் சந்திப்பு சென்னையில் உள்ள பொங்கு தமிழ் அறக்கட்டளை அலுவலகத்தில் நடைபெற்றது.

பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவரும், கூட்டமன்ற கட்சியின் குழுத் தலைவருமான ஜி.கே. மணியை அவரது உத்தியோக பூர்வ இல்லத்தில் சந்தித்து சிவாஜிலிங்கம் எம்.பி. ஈழத் தமிழர்களுக்காகத் தொடர்ந்து குரல் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டதோடு இதுவரை பாட்டாளி கட்சியின் செயல்பாடுகளுக்காக நன்றியறிதலையும், பாராட்டுக்களையும் தெரிவித்தார்.

அத்துடன் விடுதலைச் சிறுத்தைகளின் பொதுச் செயலாளர் தொல். திருமாவளவனை சென்னையில் உள்ள அக்கட்சியின் தலைமைச்செயலகத்தில் சந்தித்து ஈழத்தமிழர்களுக்காக உறுதியான போராட்டங்களை முன்னெடுத்துச் செல்வதற்காக நன்றியறிதலையும், பாராட்டுக்களையும் தெரிவித்ததோடு தொடர்ந்தும் குரல்கொடுக்க வேண்டும் என்றும் சிவாஜிலிங்கம் கேட்டுக் கொண்டார்.

இந்தச் சந்திப்பின்பொழுது விடுதலைச் சிறுத்தைகளின் சட்டமன்ற உறுப்பினர்களான செல்வம், ரவிக்குமார் ஆகியோரும் உடன் இருந்தனர். இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் தமிழ்நாடு மாநிலத் தலைவர் கே.கிருஷ்ண சாமியை சென்னையில் உள்ள காங்கிரஸ் கட்சியின் தமிழ்நாடு தலைமைச் செயலாளரான சத்திய மூர்த்தி பவனில் சந்தித்த சிவாஜிலிங்கம் எம்.பி.பேச்சுவார்த்தை நடாத்தியதுடன் ஈழத் தமிழர் பிரச்சினையில் மத்திய, மாநில அரசுகள் ஆதரவாகச் செயல்படக் கூடிய நிலைமையை உருவாக்குவதில் உதவவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்தும் பாரதீய ஜனதாக் கட்சியின் துணைத் தலைவர் இல. கணேசனை எம்.பி.சென்னையில் உள்ள தமிழ்நாடு தலைமைச் செயலகமான கமலாலயத்தில் சந்தித்த போது இல.கணேசன் ஈழத் தமிழர்களைக் காப்பாற்ற பாரதீய ஜனதாக்கட்சி உறுதியுடன் செயற்படும் எனத் தெரிவித்தார்.

புதுடில்லியில் நடைபெறும் பாரதீய ஜனதாக்கட்சியின் தேசிய செயற்குழுக் கூட்டத்தில் ஈழத்தமிழரைக் காப்பாற்ற வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்ற முயற்சிப்போம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

திராவிடர் கழகத்தலைவர் சி.வீரமணியை சென்னையில் பெரியார் திடலில் உள்ள தலைமைச்செயலகத்தில் சந்தித்த சிவாஜிலிங்கம் எம்.பி.ஈழத்தமிழர் பிரச்சினை சம்பந்தமான திராவிடர் கழகப் பொதுக் குழுவில் தீர்மானம் நிறைவேற்றியமைக்கும், இதுவரை ஆதரவாகக் குரல்கொடுத்து வந்தமைக்கும் நன்றியறிதலையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொண்டார்.

இந்திய மாக்சிஸ கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செய லாளர் என்.வரதராஜனை சென் னையில் உள்ள மாக்ஸிச



கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில தலைமைச் செயலகத்தில் சந்தித்து இதுவரை காலமும் ஈழத் தமிழர் பிரச்சினைக்காக குரல் கொடுத்தமைக்காக நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்தார். அதற்கு பதில் அளித்த வரதராஜன் ஈழத்தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு தமது ஆதரவு என்றும் உண்டு என்றும் தெரிவித்தார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் நாடு மாநிலச் செயலாளர் தா.பாண்டியனையும் துணைச் செயலாளர் மகேந்திரனையும் சென்னையில் உள்ள தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைச் செயலகத்தில் சந்தித்தார். ஈழத் தமிழர் பிரச்சினையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நிலைப்பாட்டுக்கு நன்றியையும் பாராட்டுக்களையும் சிவாஜிலிங்கம் எம்.பி.தெரிவித்தார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஈழத்தமிழ் மக்களின் பிரச்சினையில் நீதியான தீர்வுக்காக தொடர்ந்து குரல் கொடுக்கும் என்றும் அவர்கள் தரப்பில் தெரிவிக்கப் பட்டது. தேசிய முற்போக்கு திராவிடர் கழகத்தின் தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமாகிய விஜயகாந்தையும், எம்.ஜி.ஆர் அமைச்சரவையில் அங்கம் வகித்தவரும் அக்கட்சியின் அவைத் தலைவருமான பன்ருட்டி ராமச்சந்திரனையும் சந்தித்த சிவாஜிலிங்கத்திடம் அவர்கள் ஈழத்தமிழர் பிரச்சினையின் தொடக்கத்தில் இருந்தே தாம் உறுதியாக செயற்படுவதாகவும், எதிர்காலத்திலும் அவ்வாறே செயல்படுவோம் என்றும் உறுதியளித்தனர்.

நக்கீரன் ஆசிரியர் கோபாலை நக்கீரன் அலுவலகத்தில் சந்தித்தார். ஈழத்தமிழரின் போராட்டத்திற்கு தனது உறுதியான ஆதரவை தெரிவித்தார் நக்கீரன் ஆசிரியர். அவருடைய சேவைகளுக்கு நன்றியும் பாராட்டுக்களையும் சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

சண் செய்திகளில் இடம்பெற்ற நேரடித் தொலைக்காட்சி விவாதத்திலும் சிவாஜிலிங்கம் சென்னையில் உள்ள இலங்கைக்கான துணைத் தூதுவர் சுமித் நகத்தவாவுடன் விவாதம் நடாத்தினார். இதனைப்போல தினகரன், தமிழ் முரசு, தமிலோசை, முரசொலி போன்ற பத்திரிகைகளும் குமுதம் றிப்போட்டார், சஞ்சீகைகளுக்கும் வேறு பல தொலைக் காட்சி நிறுவனங்களுக்கும் பேட்டிகளை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

அதுமட்டுமன்றி பழ.நெடுமாறனால் கூட்டப்பட்ட கூட்டத்திலும் சிவாஜிலிங்கம் எம்.பி.கலந்து கொண்டு நூற்றுக்கணக்கான பேராசிரியர்கள், புத்திஜீவிகள், தமிழ்த்தேசிய உணர்வாளர்கள் ஆகியோருக்கும் ஈழத்தமிழரின் இன்றைய நிலைபற்றி எடுத்துக் கூறினார். தொப்பிள் கொடி உறவாக தமிழக மக்கள் ஈழத்தமிழர்களைக் காப்பாற்ற உரத்துக் குரல் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

தமிழகம் விஜயம் பற்றிய நிலவரங்களையும், பெறுபேறுகளையும் தமிழீழ விடுதலைப் புலிளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனையும் அரசியல்துறையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இணைப்பாளர் இளந்திரையனையும் கிளிநொச்சியில் உள்ள சமாதான செயலகத்தில் கடந்த 3ஆம் திகதி சந்தித்து சிவாஜிலிங்கம் கூறினார்.

## இராசிபலன்

**08.07.2006**
**(ஆனி 24, சனிக்கிழமை)**
**துவாதசி பிற்பகல் 12.13 மணிவரை**
**அனுசம் பிற்பகல் 1.51 மணிவரை**
**இராகுகாலம் 8.58-10.28மணிவரை**
**சுபநேரம் 2.58-4.28 மணிவரை**
**சனிப்பிரதோச விரதம்**

| | |
|---|---|
| மேடம் | மனக்கவலை, காரியதடங்கல், பொருள் விரயம், வீண்பகை. |
| இடபம் | மனோதைரியம், எடுத்தகருமங்கள்கைகூடும், கீர்த்தி, சொத்துக்களால் நன்மை. |
| மிதுனம் | சுபநிகழ்வு, காரியசித்தி, நோய்குணமடைதல், தனவருவாய். |
| கடகம் | அஜீரண ரோகம், மனக்கவலை, பணக் குறைவு, முயற்சி தாமதம். |
| சிங்கம் | தன்னம்பிக்கைக்குறைவு, ரோகநிலை, தனவிரயம், வேலைச்சுமை. |
| கன்னி | நற்கீர்த்தி, உறவினர் வருகை, பணவருவாய், தொழில்நன்மை. |
| துலாம் | மனோசங்கடம், அதிகசெலவு, முயற்சி தாமதம், போசனசுகக்குறைவு. |
| விருச்சிகம் | வெகுமானம், மாதர்நட்பு, சயனசுகம், முயற்சி கைகூடும். |
| தனுசு | பிறருக்கு உதவுதல், சோம்பல்நிலை, முயற்சி தாமதம், நித்திரைக்குறைவு, |
| மகரம் | போசனசுகம், நல்லமுயற்சி, குடும்ப மகிழ்ச்சி, பணவருவாய். |
| கும்பம் | காரியநன்மை, நண்பர்கள் உதவி, அதிகாரம், சுபநிகழ்வு. |
| மீனம் | கடினமுயற்சி, இடமாற்றம், பணவிரயம், வயிற்றுக்கோளாறு. |

- வளவன்

## நல்லூர் பி.சபைக்கு 2 இலட்சம் ரூபா பெறுமதியான ஆயுள்வேத மருந்து

இலங்கை ஆயுர்வேத கூட்டுத்தாபனத்தில் இருந்து நல்லூர் பிரதேச சபை 2 இலட்சம் ரூபா பெறுமதியான ஆயுர்வேத மருந்துகளை பெற்றுள்ளது. அம் மருந்துகள் கோண்டாவில், நல்லூர், கொக்குவில் பகுதிகளில் நல்லூர் பிரதேச சபையினரால் நடாத்தப்பட்டு வரும் ஆயுள்வேத வைத்தியசாலைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

நோயாளர்கள் இதனால் இதுவரை காலமாக நல்லூர் பிரதேசசபையின் கீழியங்கிவந்த மருந்துத் தட்டுப்பாடு நீங்கியுள்ளதாகவும் நோயாளர்கள் இவ் வைத்திய நிலையங்களில் சிகிச்சைபெற்றுக் கொள்ளலாம் எனவும் நல்லூர் பிரதேசசபை தெரிவித்துள்ளது. (து-36)

## வருட முற்பகுதியில் 225 பேர் காணாமல் போயுள்ளனராம்

(கொழும்பு)

இந்த வருட ஆரம்பகாலப் பகுதியில்மட்டுமே 225பேர் காணாமல் போயுள்ளதாக இலங்கை மனித வுரிமைகள் ஆணைக் குழு தெரி வித்துள்ளது. அத்துடன் பல்வேறு கொலைச் சம்பவங்கள் குறித்தும் தம்மிடம் முறையிடப்பட்டுள்ளதாகவும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஜனாதிபதிமஹிந்த ராஜபக்ஷ மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரத்தை பயன்படுத்துவதற்கான சட்ட திட்டங்களை பிரகடனப்படுத் தியுள்ளார். குறிப்பாக யாரேனும் ஒருவர் கைதாகும் போது அல்லது தடுத்து வைக்கப்படும் போது இந்த சட்ட திட்டங்கள் பயன்படுத் தப்பட வேண்டுமென்று ஜனாதிபதி பாதுகாப்புதரப்பினருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். (க-9)

# விடுதலைப் புலிகள் விடயத்தில் இரட்டைவேடம் போடும் மஹிந்த

## ஜே.வி.பி.சாடல்

தமிழீழ விடுதலைப்புலிகளை அணுகுவதில் மஹிந்த ராஜ பக்ஷ இரட்டை வேடமிடுவதாக ஜே.வி.பி.கடுமையாகச் சாடியுள்ளது. நாடாளுமன்றில் அவசரகாலச் சட்ட நீடிப்பு விவாதத்தில் உரையாற்றிய ஜே.வி.பி. நாடாளுமன்ற குழுத் தலைவர் விமல் வீர வன்ச,

புலிகளுடனான கடந்த கால அனுபவங்களின் அடிப்படையில் எந்த ஒரு தீர்வும் காண முடியாது. புலிகளுடனான அதிகாரப் பகிர்வு குறித்து அரசாங்கம் விவாதித்து வருகிறது. அரசாங்கத்தின் ஒட்டு மொத்த நிர்வாக அமைப்பையும் பயன்படுத்தி பயங்கரவாதத்தைத் தோற்கடிக்கவே மக்கள் மஹிந்த ராஜபக்ஷவுக்கு வாக்களித்தனர். விடுதலைப்புலிகள் விடயத்தில் அரசாங்கம் இரட்டை நிலைப் பாட்டை மேற்கொள்கிறது.

மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கையை ஒருபக்கம் மேற்கொண்டு மறுபக்கம் அதிகாரப் பகிர்வு யோசனையையும் முன்வைப்பது இழவு வீட்டில் உட்கார்ந்துகொண்டு சீட்டு விளையாடுவது போல உள்ளது. அயர்லாந்தின் விடுதலை அமைப்பான ஐ.ஆர்.ஏயின் பிரதிநிதி மார்ட்டின் மக்கின்ஸ் இந்த நாட்டுக்கு சுற்றுலா விசாவில்தான் வந்தார். அவர் உலங்கு வானூர்தியில் கிளிநொச்சி சென்று தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்தார்.

மார்ட்டின் மக்கின்சுக்கு மஹிந்த விருந்தும் அளித்தார். ஆனால் மக்கின்ஸ் பயணத்தினூடான அமைதி முயற்சிகள் தோல்வியடைந்துவிட்டன. நாட்டைவிட்டுவெளியேறும் போது புலிகள் மீதான ஐரோப்பியத் தடையானது பாரிய தவறு என்று கூறிவிட்டுச் சென்றுவிட்டார்.

காஸ்மீர் தீவிரவாதிகளை தோற்கடிக்க இந்திய அரசியல் கட்சிகள் அனைத்தும் ஒன்றுபட்டு நிற்கின்றன. தமிழீழ விடுதலைப்புலிகளையும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தையும் அரசாங்கம் தடை செய்ய வேண்டும். தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர்களை சில தனியார் தொலைக்காட்சிகள் நேர்காணல் எடுப்பதைத் தடுக்க வேண்டும் என்றார். (கு)

# சகல அரசாங்க நிறுவனங்களிலும் மின்பாவனையைக் குறைக்க நடவடிக்கை

சகல அரச நிறுவனங்களிலும் மின்சாரப் பாவனையை 10சத வீதத்தினால் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. மின்சாரத்தை சிக்கனப்படுத்தும் பொருட்டு அமைச்சு மேற்கொண்டுவரும் நடவடிக்கையின் ஓர் அம்ச மாகவே அடுத்த மாதம் தொடக்கம் இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக மின்வலு அமைச்சர் ஜோன் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

மின் பாவனையை சிக்கனப் படுத்துவோருக்கு பல சலுகைகளை வழங்க அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது. பத்துவீதம் மின்சாரத்தை மீதப் படுத்துவோருக்கு 'சீ.எப்.எல்.' மின்குமிழ்களை வழங்குவதற்கு அமைச்சு உத்தேசித்துள்ளது.

நாட்டில் அதிகரித்துவரும் மின் தேவையை பூர்த்தி செய்வதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன அடுத்த ஒரு சில வருடங்களில் அரசின் திட்டங்கள் பூர்த்தி செய்யப்படின் மின் கட்டணத்தைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் நாட்டின் எல்லாப் பிரதேசங்களுக்கும் போதியளவு மின்சாரத்தை வழங்கமுடியும்.

அதிகரித்து வரும் மின்சாரக் கேள்வியை நிரம்பல் செய்யும் வகையில் இரண்டு புதிய மின் உற்பத்தித் திட்டங்களை அரசு தொடங்கியுள்ளது அடுத்த ஒரு சில வருடங்களில் நாட்டின் சகல கிராமிய பிரதேசங்களும் மின்சாரத்தைப் பெற்றுவிடும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (கு-9)

# மலையகத் தமிழ் ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்க இந்தியாவிலிருந்து நிபுணத்துவம் வாய்ந்த குழு

(கொழும்பு)

மலையகத்திலுள்ள தமிழ்ப் பாடசாலை ஆசிரியர்களுக்கு விசேட பயிற்சிகளை வழங்குவதற்காக இந்தியாவிலிருந்து எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 16 பேர் கொண்ட ஆசிரிய நிபுணர்கள் குழுவொன்று இலங்கை வரவுள்ளது.

டிசம்பர் மாதம்வரை மலையகத்தில் தங்கியிருந்து பயிற்சிகளை வழங்கும் இந்தக் குழு 20 ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்து இந்தியாவுக்கு அழைத்துச் சென்று மேலதிக பயிற்சிகளைப் பெற்றுக் கொடுக்கவுள்ளது.

தமிழ் நாட்டிலிருந்து வரவுள்ள ஆசிரிய நிபுணர்களால் பயிற்சிகளை வழங்குவதற்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப் பட்டு வருவதாக மத்திய மாகாண தமிழ்க் கல்வி இந்து கலாசார தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் எஸ். அருள்சாமி தெரிவித்துள்ளார்.

தெரிவுசெய்யப்படும் ஆசிரியர்களுக்கு கணிதம், விஞ்ஞானம், உயிரியல், இரசாயனவியல், ஆங்கிலம் ஆகிய துறைகளில் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. ஊவா, சப்பிரகமுவ மாகாணங்களிலிருந்து 25 பேரும், மத்திய மாகாணத்தில் 225பேரும் பயிற்சிக்கென தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இந்தப் பயிற்சிநெறிக்கான முழு அனுசரணையையும் இந்திய அரசாங்கம் பொறுப்பேற்றுள்ளது. பயிற்சி நெறியின் நிறைவில் 20ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டு இந்தியாவுக்கு அனுப்பப் படுவார்கள். இதற்கான சகல ஏற்பாடுகளையும் மத்திய மாகாண தமிழ்க் கல்வி அமைச்சும், கண்டியிலுள்ள இந்திய உதவித்தூதரகமும் இணைந்து மேற்கொண்டு வருகின்றன.

குறித்த பாடங்களில் மாணவர்களைத் திறமையாகச் சித்தியடையச் செய்யும் நோக்கிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் எஸ்.அருள் சாமி மேலும் தெரிவித்துள்ளார். (கு-9)

# சமாதானத்தைக் குழப்புவது விடுதலைப்புலிகளே - அரசு

அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வைக்கான முயற்சி செய்யும் போது தமிழீழ விடுதலைப்புலிகள் தான் சமாதானப் பாதையிலிருந்து விலகியுள்ளனர் என தகவல் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் அனுர பிரியதர்சனயாப்பா தெரிவித்துள்ளார்.

ஆயினும் நாட்டு மக்களின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு அரசாங்கம் தொடர்ந்தும் பொறுப்புடன் செயற்பட விருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளினது அரசியல் துறை பொறுப்பாளரின் அறிக்கையின் படி அவர்கள் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு ஒன்றை எட்டுவதற்கு விரும்பவில்லை என்பது தெளிவாக விளக்கமுடிகிறது.

இனப்பிரச்சினைக்குதீர்வொன்றைக் காண்பதற்கு தீவிர முயற்சியில் ஈடுபட 12பேர் அடங்கிய ஆலோசனை குழுவொன்றும் இதற்கென நியமிக்கப்பட்டுள்ளது. இதே வேளை ஊடகவியலாளர் சம்பத் லக்மால் கொலைத் தொடர்பில் விசேட கவனம் செலுத்தியுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (க-9)

# தூய்மையான சிறந்த சூழல்பேணும் பாடசாலைகள் இரண்டாம் சுற்றில் 6 பாடசாலைகள் தெரிவு

யாழ்.மாவட்டத்திலுள்ள ஐந்து கல்வி வலயங்களையும் சேர்ந்த பாடசாலைகளுக்கிடையில் மத்திய சுற்றாடல்அதிகாரசபையினால் நடாத்தப்பட்ட 2004/ 2005ஆம் ஆண்டுக்கான 'தூய்மையான சிறந்த சூழல்' ஆய்வின் இரண்டாவது சுற்றில் ஆறு பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இரண்டாவது சுற்றில் யாழ். வலயத்திலிருந்து வேம்படி மகளிர் கல்லூரி, இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை, கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம் ஆகிய மூன்று பாடசாலைகளும் வலிகாமம் வலயத்திலிருந்து மானிப்பாய் மகளிர் கல்லூரி, சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி, இளவாலை ஹென்றிஅரசர் கல்லூரி ஆகிய மூன்றுபாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இப்பாடசாலைகளுக்கிடையேயான இறுதிச் சுற்று இம்மாதம் 13, ஆம் 14ஆம் திகதிகளில் இடம் பெறுமென யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் தெரிவித்துள்ளார். இறுதிச் சுற்றில் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று பாட சாலைகளுக்கான பரிசு வழங்கும் வைபவம் இம் மாதம் 28, 29, 30ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறு மெனவும், அதன்போது இவ் வைபவத்தின் சான்றிதழ்களும் பெறுமதியான பணப்பரிசில்களும் வழங்கப்படு மெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (து-133)

## மணி பல்லவத்தில் மஹோற்சவம்



## நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை

## இன்று பதின்மூன்றாம் திருவிழா

### அமரர் பெருவிருந்தே!

மணியே! மணியின் ஒளியே
ஒளிரும் மணி புனைந்த
அணியே அணியும் அணிக்கு அழகே
அணுகாத வர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தே
அமரர் பெரு விருந்தே
பணியேன் ஒருவரை நின்பதம்
பாதம் பணிந்த பின்னே!

*அபிராமி அந்தாதி*

### எமக்கருள் புரிவாய் தாயே!

சுடலையில் ஆடு கின்ற
சொக்கனின் சக்தி நீயே
நடமிடும் நாகம் மீது
நர்த்தனம் புரியும் தாயே
கடலையே கடந்து வந்து
காலடி தொழுது நின்றோம்
இடரையே துடைத்து அம்மா
எமக்கருள் புரிவாய் தாயே!

*கவிஞர் வ.யோகானந்தசிவம்*

### "நாகம்மா நீயே!"

ஆடிவரும் கலங்களிலே பக்தர் கோடி
ஒருங்கமைய நின்பதிக்கு வருவார் தாயே
தேடிவரும் அவர் குறையோ கோடா கோடி
திருமாலின் சோதரியே எங்கள் தாயே
நாடி நிற்கும் அவர்குறைகள் தீர்த்திடவே நீயுமோடி
நாகபணக் குடையின்கீழ் அமர்ந்த தாயே
வாடி யம்மா வரங்கள் அள்ளித் தாடியம்மா
வடிவார்ந்த பூஷணியே நாகம்மா நீயே!

*அரியாலையூர் சி.சிவதாசன்*

### நின் பதம் தந்திடு!

நித்தமும் உன்றன் சந்நிதி நினைந்து
பக்திகொண்டு பாடிப்பரவிட
சுற்றிவந்திடும் பகைதனை ஓட்டிடுவாய்
சுகம் பெற வழி பற்பல காட்டிடுவாய்
அருகினில் வந்து நின் மலரடி தொழுதிட
அலைகடல் அருகில் அமர்ந்திருப்பாளே!
உருகி உனை நித்தம் நினைக்கிறேன்
நின்பதம் எனக்குத் தந்திடு தாயே!

*கோவையூர் ரி.சுகப்பிரதா*

### அமைதியைத் தா!

சங்கினொடு முத்து விளை
சாகரஞ் சூழ் நயினையிலே
இங்கிதமாய் உறைகின்ற
ஈஸ்வரியே நாகம்மா!
எங்களது இடர் கண்டும்
இன்னு மென்ன தாமதமோ?
பொங்கி யெழும் போர்மடிந்து
போகட்டும்! அமைதியைத் தா!

*நயினை இராகுலன்*

### எத்தனை அலங்காரம்

எத்தனை அலங்காரம் அருள் நாகபூஷணிக்கு
அகிலத்தின் முதலாகி அருள்தரும் ஐங்கரன் அன்னைக்கு
இத் தலம் போற்றும் வேலவன் அன்னைக்கு
இறையொரு பால் கொண்ட எம் அன்னைக்கு
மலர்கள் அலங்காரம் மங்கள அலங்காரம்
வேப்பிலை அலங்காரம் வரமருள் நாகபூஷணிக்கு!

*சின் கந்தையா பொன்னாவளை*

## இன்று ஒரு தகவல்

# பக்தர்கள் மூன்று விதம்

ஓர் ஊரில் பெரியவர் ஒருவர் இருந்தார். அவர் ஒரு கோடீஸ்வரர். பல நல்ல காரியங்களை அவர் செய்து கொண்டிருந்தார்.

அவரைத் தேடி பலர் வருவார்கள். இவரும் தன்னால் முடிந்த உதவியை அவர்களுக்குச் செய்வது வழக்கம். ஒருசமயம் மூன்று பிச்சைக்காரர்கள் இவரைத் தேடி வந்தார்கள்.

"இவரிடமிருந்து ஏதாவது பொருளுதவி பெறவேண்டும்' என்று நினைத்து தான் அந்தப் பிச்சைக்காரர்கள் வந்தார்கள்.

ஆனால், மூன்று பேரும் ஒரே நேரத்தில் வரவில்லை. தனித் தனியாக வந்தார்கள்.

முதல் பிச்சைக்காரன் காலையில் வந்தான். அவன் கோடீஸ்வரனின் முன்னால் சென்று நின்று, "ஐயா! எனக்கு ஐந்து ரூபாய் வேண்டும்... தயவுசெய்து கொடுங்கள்!" என்று கேட்டான்.

இவன் இப்படி கேட்டதும் அவருக்குக் கோபம் வந்துவிட்டது.

"என்ன இது? நான் ஏதோ உன்னிடம் கடன்பட்டிருப்பது போலவும்... நீ அதைத் திருப்பிக் கொடு என்று கேட்பது போலவும் இவ்வளவு அதிகாரத்தோடு பிச்சை கேட்கிறாயே?... எவ்வளவு துணிச்சல் உனக்கு? உனக்கு ஐந்து ரூபாய் எல்லாம் தரமுடியாது. இந்தா இரண்டு ரூபாய்... எடுத்துக்கொண்டு ஓடு!" என்று சொல்லி,

கோடீஸ்வரர் ஒரு இரண்டு ரூபாயைத் தூக்கி எறிந்தார்.

பிசசைக்காரன் அதை எடுத்துக் கொண்டு அங்கிருந்து சென்றுவிட்டான். அடுத்தபடியாக பகல் வேளையில் ஒரு பிச்சைக்காரன் வந்தான். இவன் கோடீஸ்வரரிடம் எப்படி கேட்டான் தெரியுமா?

"ஐயா !... நான் மூன்று நாளாக ஒரு வேளை உணவு கூட சாப்பிடவில்லை... தயவுசெய்து எனக்கு உதவி செய்யுங்கள்!"என்றான்.

"உனக்கு எவ்வளவு பணம் வேண்டும்?" என்று அவர் கேட்டார்.

"நீங்களாகப் பார்த்து எவ்வளவு கொடுத்தாலும் அது எனக்குப் போதும்!" என்றான் பிச்சைக்காரன். அவர்,"இந்தா பத்து ரூபாய்.. இதை வைத்துக் கொள்... ஏதாவது வாங்கிச் சாப்பிடு!" என்றார்.

அவன் அந்தப் பத்து ரூபாய்ய வாங்கிக்கொண்டு போய்விட்டான்.அதன் பின்னர் மாலையில் மூன்றாவது பிச்சைக்காரன் வந்தான். இவன் கேட்ட விதம் எப்படி தெரியுமா? "மகாராஜா! உங்களுடைய உயர்ந்த குணத்தைப் பற்றி நான் நிறைய கேள்விப் பட்டிருக்கிறேன். அதனால் உங்களைப் பார்த்து தரிசனம் செய்து விட்டு போகலாம் என்று வந்தேன். தர்மவழியில் வாழ்ந்து கொண்டிருக்கும் நீங்கள்தான் கண்கண்ட தெய்வம்!" என்றான்.

உடனே அந்தப் பெரியவர் என்ன சொன்னார் தெரியுமா? "ஐயா! தயவுசெய்து உட்காருங்கள்... நீங்கள் மிகவும் களைத்துப்போய் வந்திருக்கிறீகள்... முதலில் சாப்பிடுங்கள்... மற்றவற்றைப் பிறகு பேசலாம்" என்று சொல்லி அவனை உட்காரவைத்து சாப்பாடு போட்டார். அவன் சாப்பிட்டு முடித்தான்.

அதன்பிறகு கோடீஸ்வரன் அவனிடம், "இப்போது சொல்லுங்கள்... நான் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும்?" என்று வினவினார்.

அவரது அன்புக்கு அந்தப் பிச்சைக்காரன் மனம் நெகிழ்ந்து, "ஐயா... பசியோடு வந்தேன்... நீங்கள் அறுசுவை விருந்தே படைத்துவிட்டீர்கள்... எனக்கு அதுபோதும்! வேறு எதுவும் தேவையில்லை. நீங்கள் என் மீது காட்டும் அன்பை நான் எப்போதும் மறக்க மாட்டேன் . உங்களுக்கு எல்லாம் நல்லபடியாக நடக்கும்... உங்களுக்கு ஒரு குறையும் வராது!" என்று கூறினான்.

இவனுடைய பரிவான இந்த வார்த்தைகள் அவர் மனதைத் தொட்டன. அவருக்கு அவன் மீது இருந்த அன்பு பல மடங்கு அதிகமாயிற்று. அதன் விளைவு என்ன தெரியுமா?

"இதோ பாரப்பா... இனிமேல் நீ வெளியில் எங்கேயும் போகவேண்டாம்... இங்கேயே இருந்து விடு" என்று அவர் தெரிவித்தார்.

தன்னுடைய பங்களாவிற்குப் பக்கத்திலேயே அவர் அந்த ஆளுக்கு ஒரு வீடும் கட்டிக்கொடுத்தார். கடைசிவரையில் அந்த ஆளை அவர்தனக்குப் பக்கத்திலேயே வைத்துக்கொண்டார்.

இந்தக் கதையின் கருத்து என்ன தெரியுமா? இறைவன் அந்தக் கோடீஸ்வரர் போன்றவராம். அந்த மூன்று வகை பிச்சைக்காரர்களும் மூன்று வகையான பக்தர்களாம்.

இன்றைக்கு இருக்கும் பக்தர்களெல்லாம் இந்த மூன்று வகையில் ஏதாவது ஒரு வகையைச் சேர்ந்தவர்களாகத்தான் இருப்பார்கள். முதல் வகைதான் அதிகமாக இருக்கும். மூன்றாவது வகை மிகவும் அபூர்வம்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# எந்தவொரு பிரச்சினையிலும் அரசுக்கு ஆதரவு வழங்கமாட்டோம் -ஐ.தே.கட்சி

(கொழும்பு)

நாட்டின் முக்கிய பிரச்சினைகளில் ஜனாதிபதி ராஜபக்ஷவை இனி ஆதரிக்கமாட்டோம் என்று ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

இது குறித்து அக்கட்சியின் பிரதம கொறாடாவான மைக்கெல் பெரேரா கூறுகையில், அலரி மாளிகையில் அமைதி முதயற்சிகள் தொடர்பாக பேச்சுக்கள் நடத்த வருமாறு நேற்று முன்தினம் மாலை 7மணியளவில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்திருந்தார். ஆனால் அதற்கு அரை மணி நேரத்துக்கு முன்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் சுசந்த புஞ்சிநிலமேவை பிரதி அமைச்சராக்கியுள்ளார் மஹிந்த ராஜபக்ஷ. அவர் பதவியேற்பது தொடர்பாக ரணிலுக்கு எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

பல்வேறு பிரச்சினைகளில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவைப் பெற்றுக்கொண்டே ஐக்கிய தேசியக் கட்சியை அழிக்கப் பார்க்கிறது அரசாங்கம். இந்த இரட்டை வேடத்தை நாம் ஒப்புக்கொள்ள முடியாது. இது குறித்து நாங்கள் விவாதித்தோம். இனி அரசாங்கத்திற்கு எந்த ஒரு பிரச்சினையிலும் ஆதரவு அளிப்பது இல்லை என்று முடிவு செய்துவிட்டோம் என்றார்.

கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் பேசிய ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க கருத்துக் கூறுகையில்,

அதிகரித்து வரும் மக்களின் வாழ்க்கைச் செலவீனத்தைக் கட்டுப்படுத்த அரசாங்கம் தவறிவிட்டது. பணவீக்க விகிதம் 9 வீதத்திலிருந்து 17 வீதமாக அதிகரித்துள்ளது. இதனால் மக்களின் வாழ்க்கைச் செலவீனம் கடுமையாக அதிகரித்துவிட்டது.

நாட்டினது பொருளாதாரத்தையும் அபிவிருத்தியையும் மறுசீரமைக்க அரசாங்கத்தை எங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்றார்.

ஐ.தே.கவின் குருநாகல் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கூறுகையில், அமைதி முயற்சிகளைப் பொறுத்தவரை ரணில் விக்கிரமசிங்கவை துரோகி என்று கூறிவிட்டு இப்போது அவரிடம் அமைதி முயற்சிக்கான யோசனைகளை அரசாங்கம் கோருகிறது என்றார்.

இராணுவத்தின் மூன்றாம் நிலை தளபதியான பரமி குலதுங்கவுக்கும் உரிய பாதுகாப்பை அரசாங்கம் வழங்கவில்லை. சரத் பொன்சேகா மீதான தாக்குதல் மற்றும் கெப்பிட்டிக்கொல்லாவ சம்பவத்துக்குப் பின்னர் மட்டுப் படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்ட அரசாங்கம் பரமி குலதுங்க கொலைக்குப் பின்னர் அதனை மேற்கொள்ளவில்லை என்றும் மேலும் குறிப்பிட்டார். (து)

# ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் மக்கள் வாழ்க்கை சிக்கல் நிறைந்ததாக மாறியுள்ளது- திஸ்ஸ அத்தநாயக்க

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகளினால் யூன் மாதம் 4ஆம் திகதி முதல் யூலை மாதம் 3ஆம் திகதி வரை 36 பாதுகாப்புத் தரப்பினர் கொல்லப்பட்டுள்ளதாக பிரதமர் ரட்ணசிறிவிக்கிரமநாயக்க நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இந்தக் காலப்பகுதியில் 125 பொதுமக்கள் விடுதலைப் புலிகளினால் கொல்லப்பட்டுள்ளார்கள். அது மாத்திரமல்லாது 70பாதுகாப்பு தரப்பினர் மற்றும் 174 பொதுமக்கள் வன்முறைகளினால் காயமடைந்துள்ளார்கள்.

அவசர கால சட்டத்தை மேலும் ஒரு மாதகாலத்திற்கு நீடிக்கும் யோசன்னையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் மற்றும் ஏனைய சட்டவிரோத அமைப்புக்களினால் மேற்கொள்ளப்படும் வன்முறைகளின் நோக்கம் அரசாங்கத்தை சங்கடத்திற்கு உள்ளாக்குவதே என்றும் பிரதமர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதனால் நாட்டின் சட்டம், ஒழுங்கை பாதுகாப்பதற்கும் பொதுச் சொத்துக்களை பாதுகாப்பதற்கும் இந்த அவசரகால சட்டத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிக்கும் யோசனையை சமர்ப்பிப்பதாக அவர் தெரிவித்தார்.

விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கருத்துத் தெரிவிக்கையில்,

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் கடந்துள்ள 7 மாதங்களில் மக்களின் வாழ்க்கை சிக்கல் நிறைந்துள்ளதாக மாறியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

யுத்த அச்சம் நாட்டில் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்த அவர் இந்த நிலைமையிலிருந்து மக்களை மீட்பதற்கு முறையான திட்டமொன்று அவசியம்.

நாட்டின் பாதுகாப்பு தொடர்பில் ஆபத்தான நிலைமை உருவாகியுள்ள நிலையில் 7 மாதங்களாக பாதுகாப்பு சபை கூட்டப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

இது குறித்து ஜே.வி.பியின் நாடாளுமன்ற குழுத் தலைவர் விமல் வீரவன்ஸ கருத்துத் தெரிவிக்கையில், தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழீழத்தை வெற்றிகொள்ளும் இலக் கை நோக்கி செயற்படுவதாக தெரிவித்தார்.

ஆனால் அரசாங்கம் இதனை எதிர்கொள்ளும் வகையில் செயற்படவிலை்லை. பயங்கரவாதத்திற்கு எதிராக செயற்படவே ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷவுக்கு மக்கள் ஆணை கிடைத்தது.

மக்கள் ஆணையை அந்த நோக்கத்திற்காக பயன் படுத்த வேண்டுமென்றும் அவ்வாறு இல்லாது போனால் இந்த சவாலை வெற்றிகொள்ள முடியாது என்றும் விமல் வீரவன்ஸ தெரிவித்தார். (அ-9)

## பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக

# கோட்டபாய ராஜபக்ஷவை நியமிப்பதற்கு முயற்சி?

(கொழும்பு)



பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக தனது சகோதரர் கோட்டபாய ராஜபக்ஷவை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியமிக்கக் கூடும் என்று தெரிகிறது.

ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் நியமிக்கப்படாமல் உள்ளார். இந்த நிலையில் தற்போது பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக உள்ள கோட்டபாய ராஜபக்ஷவை பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக நியமிக்க மஹிந்த முடிவு செய்துள்ளதாக மஹிந்தவின் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும் முப்படைகளின் தளபதியாக உள்ள டொனால்ட் பெரேராவை பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக நியமிக்கும் சாத்தியங்கள் குறித்தும் மஹிந்தராஜபக்ஷ ஆராய்வதாகவும் தெரிகிறது.

இந்த இரு நியமனங்களும் மேற்கொள்ளப்படும் நிலையில் முப்படைகளின் தளபதியாக கடற்படை தளபதி வசந்த கரன்னகொட நியமிக்கப்படலாம் என்று பாதுகாப்புத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (து)

# கனேடிய தூதரக அதிகாரி மன்னார் நிலைமையை ஆராய்ந்தார்

(மன்னார்)

இலங்கைக்கான கனேடிய தூதரக அரசியல் விவகார செயலாளர் கிறிஸ்டினா பிரிபொண்டெய்னி மன்னார் நிலைமைகளை நேரில் ஆராய்ந்தார்.

மன்னா்ர் அரச அதிபர் வி.விசுவலிங்கத்தைச் சந்தித்த கிறிஸ்டினா, மன்னர் பிரதேச செயலக அதிகாரிகளுடன் தற்போதைய நிலைமைகளைக் கேட்டறிந்தார்.

இதன்போதே அண்மைக்காலமாக மன்னாரில் மீன்பிடித் தொழிலில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டைகள் தொடர்பாக கிறிஸ்டினாவிடம் மன்னார் அரச அதிபர் விளக்கி னார்.

இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மன்னர் பகுதி உறுப்பினர்களையும் கிறிஸ்டினா சந்தித்துப் பேசினார்.மேலும் தலைமன்னார் பகுதிக்குச் சென்று பார்வையிட்ட கிறிஸ்டினா மீனவர்களுடன் கலந்துரையாடினார். அதன்பின்னர் பேசாலை விக்டோரியா தேவாலயத்துக்குச்சென்று வின்செண்ட் பற்றிக் அடிகளாரை சந்தித்தார். (து)

# இராணுவ கப்டன் தலைமையிலான கொள்ளைக் கும்பல் கைது

(கொழும்பு)

சொகுசு வாகனங்களைக் கடத்திச் சென்று விற்பனை செய்த இராணுவத்திலிருந்து தப்பியோடிய கப்டன் தலைமையிலான கும்பலை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

பேலியகொட குற்றத்தடுப்புப் பிரிவினர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.இந்தக் கும்பலால் கொள்ளையிடப்பட்ட இரண்டு கோடி ரூபாவிற்கு மேல் பெறுமதி வாய்ந்த பிராடோ ஜீப், கார் மற்றும் வான் ஆகியவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

பத்தரமுல்லை, கேகாலை, திஸ்ஸமாறாம, இரத்மலானை ஆகிய பிரதேசங்களிலிருந்து இந்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். 6 பேரைக் கொண்ட இந்தக் கொள்ளைக் கும்பலுடன் வங்கி அதிகாரி ஒருவருக்கும் தொடர்பிருப்பதாகக் கூறப்படுகிறது.

கைப்பற்றப்பட்ட 3 வாகனங்களும் வடக்கு-கிழக்கில் விற்பனை செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்ததாகவும் பிராடோ ஜீப் வவுனியாவில் கைப்பற்றப்பட்டுள்ளதாக்வும் குற்றத் தடுப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.இந்தக் கொள்ளைக் கும்பலை நடத்தும் இராணுவ கப்டன் கடைசியாக குருவிட்ட இராணுவ முகாமில் பணியாற்றியுள்ளார். இராணுவத்தை விட்டு விலகிய இந்த இராணுவ கப்டன் கொழும்பு வெள்ளவத்தைப் பிரதேசங்களில் வாகனங்களைக் கொள்ளையிட்டு விற்பனை செய்திருப்பதாக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. (து)

# தாயகத்தின் கண்ணீரையும், துயரையும் உலகிற்குச் சொல்ல புலம்பெயர் படைப்பாளிகள் முன்வர வேண்டும்

## புதுவை இரத்தினதுரை அழைப்பு

தமிழீழத் தாயகத்தின் கண்ணீரையும் துயரையும் உலக்குக்குச் சொல்ல புலம்பெயர் படைப்பாளிகளே உங்கள் படைப்புத் தளத்தை விரிவாக்கிக்கொண்டு செயற்படுங்கள் என்று தமிழீழ விடுதலைப்புலிகளின் கலை பண்பாட்டுத்துறைப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை அழைப்பு விடுத்துள்ளார்.

அவுஸ்திரேலியாவில் ஒலிபரப்பாகும் இன்பத்தமிழ் வானொலிக்கு அளித்த நேர்காணலிலேயே இவ் அழைப்பினை விடுத்துள்ளார்.

அதில் மேலும்,

உலகின் எல்லாத் தேசங்களும், இனங்களும் வெற்றி பெறுவதற்கு முன்னர் உலகம் எந்த நெருக்குவாரங்களைக் கொடுத்ததோ அந்த நெருக்குவாரங்களை எமக்கு உலகம் இப்போது கொடுத்துக்கொண்டிருக்கிறது.

நெருக்குவாரங்கள் கொடுக்கப்பட்ட இனங்கள் எல்லாமே இறுதியில் வெற்றி பெற்றிருப்பது எமக்கு ஆறுதலானது. எமக்கும் அந்த நிலைமையே ஏற்படும். நாங்கள் போர்ச்சூழலுக்குள் திரும்பவும் செல்லக்கூடிய வாய்ப்புகள் இருக்கலாம். அதை எதிர்கொள்வதற்கு எங்களுடைய படைப்பாளிகளின் பங்களிப்பைக் கேட்டு நிகழ்வு ஒன்றைச் செய்திருந்தோம்.

1990முதல் 2000 ஆம் ஆண்டு காலப் பகுதி வரை எங்களுடைய படைப்பாளிகள் தான் தர்மம்சார் எமது போராட்டத்தின் பக்கத் துணையாக இருந்து மக்களை இணைத்தவர்கள். உலகுக்குச் சொன்னவர்கள்.

எமது போராட்டம் வேறு ஒரு வடிவம் எடுத்தது. இராஜதந்திர நகர்வுகள் என்று கூறப்பட்ட நிலையில் ஈழத் தமிழனுக்கு அப்படி எல்லாம் எதுவும் இல்லையாம். அழுகைதான் பரிசு. அடங்கிப் போவதுதான் விதி என்று அரச தரப்பு எச்சரிக்கை விடுத்தது. நாங்கள் அடங்கிப் போக முடியாது. இது வரை போராட்டத்துக்கான பணிகளைச் செய்த படைப்பாளிகள் இப்போது போருக்கான பணிகளைச் செய்கிறோம்.

1995ஆம் ஆண்டு காலம் முதல் 2000 ஆம் ஆண்டு காலம் வரை வன்னியிலே நாங்கள் வெற்றிகளைச் சந்தித்த போதும் சிறையிலிருப்பது போல் இருந்தோம். எமது அழுகையின் குரல் பெரிதாக வெளிவரவில்லை. எமது கண்ணீர் பெரிதாக வெளியில் தெரியவில்லை.

இன்று உலகம் முழுமைக்கும் நாம் அறிந்தவரையில் 40 ஊடகங்கள் ஈழத் தமிழர்களால் நடத்தப்படுகின்றன. இதைத் தவிர பல்லாயிரக்கணக்கான படைப்பாளிகள் உள்ளனர்.

நாளை திரும்பவும் வன்னி என்ற வட்டத்துக்குள் அடக்கி- அடக்க முடியாது- ஒடுக்கி ஒடுக்க முடியாது. அதற்கு எதிரான போராட்டத்தை நடத்தும்போது நாங்கள் எழுதிக் கொண்டும் பாடிக் கொண்டும் ஆடிக்கொண்டும் இருக்கமுடியாது. அந்தச் சுமையை உலகம் முழுமைக்கும் பரவிய உறவுகள் சுற வேண்டும். எமது அழுகையையும் கண்ணீரையும் நீங்கள் கூறவேண்டும்.

எங்களுடைய அழுகையை தாயகத்தின் மொழியில் உங்களால் சொல்ல முடியாது. அது பொய்யாக இருக்கும். புலம்பெயர் தமிழராக இருப்பவர் ஆர்ட்டிலறி அடிப்பது பற்றியோ செல் அடிப்பது பற்றியோ எழுத முடியாது. எங்களுடைய குரலை உங்களுடைய குரலினூடாக உலகத்துக்குச் சொல்லுங்கள். உலகுக்கு உங்கள் மொழியில் சொல்லுங்கள். வேற்று மொழியில் சொல்லுங்கள். பிரெஞ்ச், டொச் மொழியில் எழுதக்கூடிய தமிழர்கள் இன்று வந்துவிட்டார்கள். தமிழில் எழுதியவர்கள் அதை வேற்று மொழிக்குக் கொண்டு செல்லுங்கள்.

ஈழத்தமிழினம் படும் துயரமும் கண்ணீரும் வதையும் வலியும் உலகுக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும். அது உலகுக்குத் தெரிந்திருந்தால் நமக்கு இடைஞ்சல் இல்லையே... ஆண்டுக்கு இருமுறை கூட்டம் கூடுவது அல்ல புலம்பெயர் தமிழரின் பணி. அதற்கு மேலாக இயங்கவேண்டும். படைப்பாளிகள் இன்னும் கூடுதலாகச் செய்ய வேண்டும். தாயகத்து உறவுகளின் வலியை படைப்பாளிகள் தங்களது படைப்புக்களின் மூலம் உலகத்துக்குச் சொல்ல வேண்டும்.

பாலஸ்தீன மக்களின் துயரமும் கண்ணீரும் அப்படித்தான் வெளியே வந்தது. இலத்தீன் அமெரிக்க நாட்டு மக்களின் துயரமும் கண்ணீரும் அப்படித்தான் வெளியே வந்தது. வியட்நாமிய மக்களின் கண்ணீரும் துயரமும் அப்படித்தான் வந்தது. அது போல ஈழத்தமிழரின் கண்ணீரையும் துயரையும் நீங்கள்தான் சொல்லவேண்டும்.

அரசியல் ரீதியாக எப்படி ஒரு இராஜதந்திர நகர்வு மேற்கொள்ளப்படுகிறதோ அப்படி படைப்பு ரீதியாகவும் ஒரு நகர்டிக்கை இயங்கவேண்டும். புலம்பெயர் தேசத்தில் கலைஞர்களும் படைப்பாளிகளும் அதிகம். ஒரு தாயின் கடமையைப் போல் செய்யவேண்டும்.

நாங்கள் போராடுவோம் என்பது உண்மை. இறுதி தமிழன் இருக்கும் வரை போரிடுவோம். ஆனால் நமது நியாயப்பாட்டினை உலகுக்குச் சொல்வது யார்? புலம்பெயர் தமிழர்களுக்குள் இருக்கின்ற படைப்பாளிகளும் கலைஞர்களும்தான். அவர்கள் அதைச் செய்யவேண்டும். படைப்பின் மூலமே போராட்டங்கள் வெற்றி பெறுகின்றன. மார்க்ஸிம் கார்க்கிய, மாயவோஸ்கி, பாப்லோ நெருடா என்றாலும் பாரதி என்றாலும் அவர்கள் போராட்டத்துக்கு பணி செய்தனர்.

ஆகவே எமது புலம்பெயர் உறவுகளே! அவர்களுக்குள் பூத்துக் கிடக்கும் படைப்பாளிகளே! இந்தப் பணிகளை அவர்கள் தங்கள் கைகளில் எடுக்கட்டும்! ஏனெனில் நாம் திரும்பவும் போரிடுவோம். திரும்பவும் அடைபடுவோம். எங்கள் அவலம் உங்களின் கண்களால் தெரியவேண்டும்.

பிரியத்துக்குரிய எமது புலம்பெயர் தமிழ் உறவுகளுக்குள்ளே பூத்துக்கிடக்கிற இளம் படைப்பாளிகளே! உங்களுக்கு இரட்டை வேலை இருக்கிறது. எங்களுக்கு ஒற்றைச் சுமை. இந்தப் போராட்டத்தை அடுத்த கட்டத்துக்கு நகர்த்துவதில் உங்களது பங்களிப்பு பெரிது என்பதை புரிந்துகொண்டு செயற்படுங்கள். இது கவிஞர் புதுவை இரத்தினதுரையின் குரல் அல்ல. உங்களுடைய தாயகத்தின் குரல். புலம்பெயர் வாழ் தமிழர்கள் இன்னமும் இந்தப் போராட்டத்தைப் புரிந்து கொள்ளாதிருந்தால் அவர்களுக்கும் சொல்ல வேண்டிய கடமை இருக்கிறது. நாம் அவர்களைப் பிழையாகக் கருதவில்லை. புலம்பெயர் தமிழர்களுக்கு விடுதலையின் தாற்பரியத்தையும் எமது அழுகையையும் கண்ணீரையும் சொல்லித்தான் தெரிய வேண்டுமெனில் அவர்களுக்கும் சொல்லிக் காட்டவேண்டும்.

விடுதலைப்புலிகள் என்பது வெறும் சொல் அல்ல. விடுதலைப் போராட்டத்தின் சொல்தான் விடுதலைப்புலிகள். அவர்கள் சொல்லிக்கொண்டே இருக்கட்டும். நான் இல்லாமல் விடுதலைப் போராட்டமா? வெற்றி பெறுமா? என்று கூறுபவர்கள் இருக்கிறார்கள்- பழைய போராளிகள் என்ற போர்வையில் அவர்கள் இருக்கட்டும்.

இந்தப் போராட்டத்தை எதிர்க்கிறவர்கள் நேர்மையானவர்கள். நடுநிலைமை என்பதற்கு தமிழிலே வார்த்தைகளே இல்லை. தன்னுடைய இயங்கும் தன்மையை வைத்துக்கொண்டே நடுநிலைமையாளன் உருவாகிறான். தனியே எழுதிக்கொண்டும் பாடிக்கொண்டும் ஆடிக்கொண்டும் மட்டும்தான் இருப்பேன் என்பவர்கள்தான் நடுநிலை பற்றிப் பேசுவார்கள். காலாவதியான பொருட்களை கையில் எடுத்து வைத்திருப்பார்கள். அவர்கள் புதிதாகச் செய்வதே காலாவதியான பொருட்களை வைத்திருப்பதுதான். நடுநிலைமை என்பது தப்பித்துக் கொள்ளுதல். நடுநிலைமையை மீறி பட்டுப்படாமல் செல்லும் போக்கும் உண்டு. பின்பக்கம் பார்த்தால் கிளிபோலும் முன்பக்கம் பார்த்தால் காகம் போலும் இருக்கும். அப்படியான படைப்பாளிகளும் இருக்கிறார்கள்.

எமது விடுதலைப் போராட்டத்தைப் பற்றி நிறைய விமர்சனங்கள் உண்டு. இந்த விடுதலைப் போராட்டம் சரிக்கும் பிழைக்கும் இடையேதான் ஓடுகிறது. ஏற்றுக்கொள்கிறோம். நாங்கள் தாயகத்திலே உட்கார்ந்து கொண்டு புல்லாங்குழல் வாசிக்கவில்லை. பூப்பறிக்கவில்லை. உயிரோடு விளையாடுகின்ற – சாவோடு விளையாடுகின்ற போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறோம். இந்தப் போராட்டத்தின் நியாயத்தன்மையை கொஞ்சமாவது புரிந்துகொள்ளவேண்டும். சரியும் பிழையும் இருக்கலாம். விகிதாசாரத்தில் எது அதிகம் என்று பார்க்கவேண்டும்.

எல்லோருக்கும் சரியானதான ஒரு போராட்டத்தை- எல்லோரும் கூடி ஒரு விடுதலைப் போராட்டத்தை நடத்துவது என்றால் 'விடுதலைப்புலிகள்' என்ற பெயரைக் கூட தலைவர் இன்னமும் வைத்திருக்க முடியாது. கதைத்துக்கொண்டே இருந்திருப்போம். இந்த விடுதலை என்பது வேண்டுமா இல்லையா? நாய்க்கும் மரத்துக்கும் இருக்கிற விடுதலை ஈழத் தமிழனுக்கும் வேண்டும் அல்லவா? அந்த விடுதலைப் போராட்டம் இப்போது நடக்கிறது அல்லவா? அதன் பக்கம் நீங்கள் நிற்க வேண்டும் இல்லையா? அந்தப் புள்ளியிலிருந்து தான் இந்தப் படைப்பாளிகள் தொடங்கவேண்டும்.

முழுமையான விடுதலைக்கான எல்லைகளைத் தொட்டு நிற்கும் தூரத்தில் நிற்கின்றோம் நாம். எமது விடுதலையை நாம் நிச்சயம் பெறுவோம். ஆயிரம் தடைகள் வரட்டும். உலகில் ஆயிரம் தடைகள் வந்தபின்னர் தான் மக்கள் வென்றிருக்கிறார்கள். நாடுகள் வென்றிருக்கின்றன. இப்போது எங்களுக்கும் வந்திருக்கிறது. நாங்கள் வெல்லுவோம். தமிழ் மக்களின் சக்தியோடு நாங்கள் இணைந்து நிற்கிறோம்.

எனவே எனது உறவுப் படைப்பாளிகளே! சிறகுகளை அகல விரியுங்கள்! விடுதலையின் வானத்தை நோக்கியதாக அது இருக்கட்டும்! எல்லோரும் சேர்ந்து வாருங்கள் வடம் பிடிப்போம்! இழுத்து வந்து சரியான இடத்தில் நிறுத்துவோம்!

உங்கள் படைப்புலம் இன்னும் இன்னும் விரிய வேண்டும் என்று தாயகத்தின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளார். (த)

## சிறை அதிகாரிகளின் சித்திரவதையால் கைதி ஒருவர் மரணமானார்

(கொழும்பு)

இரத்தினபுரியில் வெடிகுண்டு பீதி தொடர்பில் கைது செய்யப்பட்ட நபர் சிறை அதிகாரிகளின் சித்திரவதை காரணமாக மரணமடைந்துள்ளார்.

வெடிகுண்டுப் பீதி தொடர்பாக பிட்டகொட்டெவைச் சேர்ந்த எம்.எஸ்.பஃப் பெரேரா மற்றும் காமினி முனவீர ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

இருவரையும் தவறாக கைது செய்து விட்டதாக நீதிமன்றில் பொலிஸார் தெரிவித்தனர். இதனையடுத்து இருவரும் விடுவிக்கப்பட்டனர்.

இரத்தினபுரி நீதிமன்றில் இருவரும் முன்னிலைப்படுத்தப்பட்ட போது குருவிட்ட சிறைச்சாலையில் மிகவும் கொடூரமாகத் தாம் தாக்கப்பட்டதாக காமினி முனவீர தெரிவித்திருந்தார்.

ஏழு சிறைக் காவலர்கள் இருநாட்களாக தங்களை சித்திரவதை செய்ததாகவும் எதுவித மருத்துவ சிகிச்சையும் தங்களுக்கு அளிக்கப்படவில்லை என்றும் கூறியிருந்தார்.

இரத்தினபுரி நீதிமன்றம் கடந்த செவ்வாய்க்கிழமை இருவரையும் விடுவித்தது. இதைத் தொடர்ந்து இருவரும் கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

விடுதலையான எம்.எஸ்.எப். பெரேரா (வயது 55) சுயநினைவிழந்த நிலையில் தலையில் காயங்களுடன் அனுமதிக்கப்பட்டார். ஆனால் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் இரவு உயிரிழந்துள்ளார். (த)

## பண்பாட்டியல் பட்டப்பின் படிப்பு பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தினால் பண்பாட்டியல் முதுகலைமாணி (M.A) பட்டப்பின் படிப்பு (மீள் பரீட்சை) முடிவுகள் யாழ். பல்கலைக்கழப் பரீட்சைத் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

செல்வி எஸ்.பால்சிங்கம், திருமதி ப.பாலசிங்கம், பி.செல்லையா, திருமதி ஜி.கணேசநாதன், ரி.ஜோன்குயின்ரஸ், கே.கமலநாதன், கே.ஆர்.கமலநாதன், கே.கதிரமலை, இ.நித்தியானந்தன், ஏ.பிரபானந்தன், எம்.ஸ்ரீமுருகவேள், என்.சுசீந்திரராஜா, ரி.தவேந்திரராஜா ஆகியோர் சித்தியடைந்துள்ளனர். (து-133)

## மூன்று புதிய இன வெண்டி அறிமுகம்

(கோண்டாவில்)

திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சித் திணைக்களத்தால் மூன்று புதிய வெண்டி இனங்கள் கண்டுபிடிக்கப்பட்டு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

பச்சை நிறமான வெண்டிக் காய்களிற்குப் பதிலீடாக இளம் பச்சை நிறமான, மஞ்சள் வைரஸ் நோய்க்கு எதிர்ப்பு சக்தியை காட்டக்கூடிய மூன்று புதிய இனங்களே TV8 , TV7, TV6 எனப் பெயரிடப்பட்டு அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்திலுள்ள பால்வெண்டி இனத்தை பெண் தாவரமாகவும் விவசாய திணைக்களத்தால் சிபாரிசு செய்யப்பட்ட கரிதா வெண்டி இனத்தை ஆண் தாவரமாகவும் கொண்டு இத்தாய்த் தாவரங்களை கலப்புப் பிறப்பாக்கம் செய்து புதிய தாவர இனங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இம்மூன்று இனத் தாவரங்களின் காய்களும் இளம் பச்சை நிறமான நீண்ட காய்கள் ஆகும். TV8 , இனக் காய்கள் உருளை வடிவம் அற்றிருப்பதால் ஐந்து புருவங்களை கொண்டிருக்கும்.

இம்மூன்று இனத் தாவரங்களுமே பயிரிட்டு 35 நாட்களில் பூக்கத் தொடங்கி 45 நாட்களில் அறுவடையைத் தரும். ஒரு தனித் தாவரத்தில் இருந்து 28 முதல் 32 வரையான காய்களை ஒரே நேரத்தில் பறிக்கலாம். இறுதி அறுவடையின் போது தாவரமானது 180 செ.மீ தொடக்கம் 200 செ.மீ வரை வளர்ச்சியடையும். இது சராசரியாக ஒரு ஹெக்ரெயருக்கு 28 தொன் தொடக்கம் 32 தொன் வரையான விளைச்சலை தரக்கூடியது. TV8 இனத்தின் விதைகளை யாழ்.செயலகத்தினால் நடத்தப்பட்டுவரும் சீற்கோ நிறுவனம் வழங்குகின்றது.

ஏனைய இரு இனங்களின் விதைக் கையிருப்பு விவசாயத் திணைக்களத்தில் முடிவடைந்துள்ளமையால் அடுத்த பருவத்தில் விவசாயத் திணைக்களத்திடமிருந்து விதைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர் ஸ்யாலேந்திரன் தெரிவித்துள்ளார். (து-36)

## பெருந்தொகைப் பணத்துடன் இளைஞர் கைது

(பருத்தித்துறை)

கடந்த புதன்கிழமை மந்திகையில் இளைஞர் ஒருவர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து 127000 ரூபா பணத்தினைப் படையினர் கைப்பற்றியுள்ளதாகவும் இவர் விடுதலைப் புலிகளின் பிரதேச நிதி சேகரிப்பாளர் எனவும் இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் நடராசா சிவரூபன் எனத் தெரிவிக்கப்படுகிறது. (து-55)




# போர்த்துக்கலும் பெனால்டி தண்டனையும்!

(முனிக்)

களத்தில் இரு வீரர்கள் மோதிக் கொள்ளும் போது அப் பிரச்சினைக்கு தீர்வு நடுவர் தான். அவர் எடுப்பதுதான் முடிவு. எச்சரித்து



விடுவதும், தண்டிப்பதும் அவருக்குள்ள கடமை. ஒரு குறிப்பிட்ட வீரர் இன்னொரு குறிப்பிட்ட வீரரை குறிவைத்து விரட்டி தடுப்பது அல்லது பெனால்டி ஏரியாவில் கோல் போடவிடாமல் செய்வது உள்ளிட்ட விஷயங்களை நடுவர் கவனித்து முடிவு எடுப்பார்.



நடுவரின் தீர்ப்பை இரு அணிகளும் ஏற்றுக்கொள்ள வேண்டியது கட்டாயம். பொதுவாக இரு தரப்பில் எந்தப்பக்கம் தீர்ப்பு அளித்தாலும் இன்னொரு புறம் பகையை சம்பாதிக்க வேண்டியது தவிர்க்க முடியாது.

கடந்த புதன்கிழமை நடந்து முடிந்த போட்டியில் வெற்றிதோல்வியை நிர்ணயித்தது நடுவரின் முடிவுதான். போர்த்துகல் வீரர் ரிகார்டோ கார்வல்கோ பெனால்டி ஏரியாவில் பந்தை அடித்துகோல் ஆக்க முயன்ற பிரான்ஸ் வீரர் தியரி ஹென்றியை இடது காலால் தடுத்து அவரை கீழே விழச் செய்தார். அவர்கால் என்னை விழச் செய்தது என்றார் ஹென்றி. நான் அவரை கடந்து விட்டதாகவே நினைத்தேன். ஆனால் அவர் என்னை துரத்தி பிடித்திருக்கிறார் நாங்கள் பெனால்டி கேட்கவில்லை. அவர்களாகத்தான் கொடுத்தார்கள். என்கிறார் ஹென்றி.

ரி.வி.மீள் பரிசோதனையில் அது வேண்டுமென்றே செய்ததா அல்லது தெரியாமல் செய்ததா என்பதை பார்த்தால் இரண்டும் நடந்தது போல்தான் உள்ளது. ஆனால் ரி.வி. இயக்குநர்கள் பெனால்டிகளை வழங்கவோ நிறுத்தவோ முடியாது. நடந்த சம்பவத்தை நம்பாத கார்வல்கோ விஷயம் விபரீதம் ஆகும் முன் தடுத்துவிட நடுவரின் மனதை மாற்ற நோக்கி இரு கைகளையும் எடுத்து கும்பிட்டார். ஆனால் அது நடக்கவில்லை.

போர்த்துக்கல் வீரருக்கு மன்னிப்பு இல்லை. தண்டனையும் உறுதி செய்யப்பட்டது. பிரான்ஸிற்கு ஏற்கனவே வீசிக் கொண்டிருந்த அதிர்ஷ்ட காற்று இங்கும் பலமாக வீசியது போர்த்துக்கல் ரசிகர்களின் பெரிய எதிர்ப்புகளுக்கு இடையில் பெனால்டி வாய்ப்பை கோல் ஆக்கினார் ஜிடேன். உதை பந்தாட்டத்தின் நுணுக்கங்கள் தெரிந்த யாருக்கும் நடுவர் செய்தது சரி என்பதை ஒத்துக்கொள்ளமாட்டார்கள் என்கிறார் ரொனால்டோ.

அது பெனால்டி என்பதை ஒப்புக்கொள்கிறேன். நாங்கள் அதை எதிர்க்கவில்லை அதேசமயம் ரொனால்டோவை பிரான்ஸ் வீரர் தடுத்தபோது அதுவும் பொனால்டி தானே எங்கள் பக்கம் அநியாயம் செய்து விட்டு, பிரான்ஸிற்கு மட்டும் சாதகமாக நடுவர் நடந்திருக்கிறார். என்கிறார் போர்த்துக்கல் பயிற்சியாளர் ஸ்கோலரி.

போர்த்துக்கல் இதற்கு முன் இரண்டு



முக்கிய அரையிறுதிகளில் பெனால்டி முறையில் பிரான்ஸிடம் சாபம் பெற்றிருக்கிது. 1984 மற்றும் 2000இல் நடந்த யூரோ சம்பியன்ஷிப் போட்டிகளிலும் பெனால்டியின் கைகளில் தான் முடிவு. தென் அமெரிக்க நடுவர்கள் எல்லோ ரும் ஒரே ரகம் தான். நல்ல போட்டிகளை கொலைசெய்து விடு வார்கள் என்றார் ஸ்கோலரி. எதிரணி சில நேரங்களில் நம்மை விட தகுதி குறைந்தவர்களாக இருப்பார்கள். பிரான்ஸிக்கு கிடைத்த வாய்ப்பில் முன்னேறி விட்டது என்கிறார் போர்த்துக்கல் அணி தலைவர் பிகோ. இறுதிப் போட்டியில் மோதவிருக் கும் இத்தாலி மற்றும் பிரான்ஸ் அணி இரண்டுமே பெனால்டி வாய்ப்பில் தப்பியவையே. இந்த அணிகளைப் பொறுத்தவரை பெனால்டி வாய்ப்பில் தப்பியவையே இந்த் அணிகளைப் பொறுத்தவரை பெனால்டி வர மாகிவிட்டது.

முதல் சுற்றில் அவுஸ்தி ரேலியாவுடன் மோதிய இத்தாலி 1-0 என்ற கணக்கில் தான் போட்டியை வென்றது. அந்த பொனால்டி கோலைத்தவிர இரு அணிகளும் கோல் போடவில்லை. அதே போல்தான் முடிந்து விட்டது. கடந்த புதன்கிழமை நடந்த போட்டியும் இதுபோன்ற சூழ்நிலையில் திறமையான அணி என்று ரசிகர்கர்கள் கருதும் அணி தோற்றுவிட்டால் பெனால்டி முறை ஒரு விமோசனம் இல்லாத சாபம்தானே.

கடந்த புதன்கிழமை முடிந்த போட்டியில் பெனால்டி வாய்ப்பால் போர்த்துக்கல் இறுதிப் போட்டிக்கு முன்னேற முடியாமல் போனது. ஆட்டத்தை பெனால்டி தீர்மானிப்பது அரங்கத்தில் ரசிகர்களை இருக்கையின் விளிம்புக்கே கொண்டு செல்லும் ஒரு நிகழ்ச்சி. இதில் வெற்றி தோல்வி லொத்தர் முடிவுபோல்தான்.

அரங்கத்தில் எத்தனை ஆயிரம் பேர் இருந்தாலும் உச்சக்கட்ட டென்ஷனில் இருப்பவர் கோல்கீப்பர் ஒருவர்தான். பந்தை அடித்தவுடன் அதை பார்ப்பது கூட கஷ்டம். அடுத்த வினாடியில் அது வலையில் இருக்கும். ஒருவினாடிக்குள் பந்து வரும் திசையறிந்து அதை மறிப்பது என்பது கோல்கீப்பரின் அனுமானத்தை பொறுத்து இருக்கிறது.

பந்து இடப்புறம் செல்லுமா வலப்புறம் செல்லுமா என்பதை கணிப்பது கஷ்டம் தான். வீரர் தனது கண்களை பந்து மீதும், அதே நேரத்தில் தான் அடித்தால் எந்த திசையில் செல்லும் என்பதை கோல் கீப்பர் உணர்ந்து கொள்ளாதவாறு பார்த்துக் கொண்டிருப்பார். ஒரு புறம் அடிக்கப் போவது போன்று பாவனை செய்துவிட்டு இன்னொரு புறம் அடிப்பதும் நல்ல பெனால்டி ஷூட்டரின் ‘கால் தேர்ந்த’ கலை. இடது காலால் அடிக்கும் வீரர் பொதுவாக இடதுபுறம்தான் அடிப்பார். ஆகவே, இடது கால் வீரருக்காக வலப் புறம் அதிகம் கவனம் செலுத்த வேண்டியது இல்லை. வீரர் எந்தபக்கம் அடிப்பார் என்பது தெரியவில்லை என்றால், வீரரின் இடப்புறம் சாய்ந்து பந்தைத் தடுக்கலாம். எல்லாவற்றுக்கும் மேலாக கோல்கீப்பரின் கணிப்பு சரியாக இருந்தால் அரங்கத்தில் கைதட்டு கிடைக்கும் இல்லாவிட்டால் சக வீரர்களிடம் குட்டு கிடைக்கும்.

# இத்தாலியின் ஆனந்தமும், ஆணவமும்

## அமிர்தன்

‘எங்களை வெல்ல இந்தப் பூவுலகில் யாரும் இல்லை. செவ்வாய்க்கிரகத்தில் யாராவது இருந்தால் வரட்டும் பார்க்கிறோம் ஒரு கை’ என்று இத்தாலி பத்திரிகைகள் பூரிப்புடன் சவால் விட்டுள்ளன.

ஆட்ட நேரத்தில் இரு அணிகளும் கோல் போடாததால் கூடுதல் நேரம் தரப் பட்டது. அதில் பேபியோ கிராஸோ, அலசாண்ட்ரோ டெல் பிரோ என்ற இரு இத்தாலி வீரர்களும் அடுத்தடுத்து கோல் போட்டனர். அப்போது பரவிய மகிழ்ச்சி அலை இத்தாலியில் இன்னமும் அடங்கவில்லை. அடங்காததது கூட பரவாயில்லை. விநாடிக்கு விநாடி அது அதிக மாகிக் கொண்டே போவது போல பிரமை ஏற்படுகிறது.

‘எங்களை யாராலும் வெல்ல முடியாது செவ்வாய்க்கிரக வாசிகளாலும்’ என்று ஆணவத்துடன் சவால் விட்டிருக்கிறது மெசாஜிரோ என்ற பத்திரிகை தனது தலையங்கத்தில்.

உலகக்கோப்பை உதைபந்தாட்டப் போட்டியில் இதுவரை 4 முறை இத்தாலியைச் சந்தித்துள்ளது ஜேர்மனி. 4 முறையும் தோல்விதான் அதற்கு என்று மகிழ்ச்சியுடன் கூறுகிறது தலையங்கம்.

டாட்மண்ட் என்ற ஊரில் 1935-இல் கட்டடப்பட்ட விளையாட்டு மைதானத்தில் தான் இந்தப் போட்டி நடந்தது. இதுவரை அங்கு 13 ஆட்டங்களில் பங்குகொண்டு அனைத்திலும் வென்ற ஜேர்மனி 14வதாக கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த போட்டியில் தோற்றுவிட்டது.

இத்தாலியர்கள் ரோமனியர்கள். அவர்களுக்கு கர்வம் அதிகம் அது மெசா ஜிரோ பத்திரிகையில் மட்டுமல்ல ‘லா ரிபப்ளிகா, ‘கொரிர் டெல்லா சேரா’ என்ற பத்திரிகைகளிலும் எதிரொலிக்கிறது. ஜேர்மனியர்களை மண்ணைக் கவ்வ வைத்துவிட்டோம் இதனால் அவர்களுக்கு நம்மீது கோபம் வரும். வரட்டுமே நம்முடைய பீஸாவைச் சாப்பிடாமல் புறக்கணிப்பார்கள் அதனால் என்ன நமது வெற்றியின் சுவையும் மணமும் குறைந்தா போய்விடும் என்று ஆணவம் பொங்க தலையங்கம் எழுதியிருக்கிறது கொரிர் டெல்லா ஸ்போர்ட் என்ற பத்திரிகை.

*ரோம் நகரில் அட்டகாசம்.* கடைசி இரண்டு நிமிஷத்தில் அடுத்தடுத்து 2 கோல்களைப் போட்டு இத்தாலி வென்றதும் இத்தாலியே ஆர்த்தெழுந்தது. அதிலும் தலைநகரம் ரோமாபுரி அல்லோல கல்லோலப்பட்டது.

வீட்டில் இருந்தவர்கள் மகிழ்ச்சியை அடக்க முடியாமல் கார், மொபட் என்று கிடைத்த வாகனங்களில் வீதிக்கு வந்து கோள்களை ஒலித்து (இம்சைப்படுத்தி) கொண்டாடினர். இத்தாலிய தேசியக் கொடியை அசைத்து களிநடனம் புரிந்தது. சர்கோ மாசிமோ என்ற நகர மையப் பகுதியில் ஆயிரக்கணக்கான ரசிகர்கள் ராட்சத திரையில் ஆட்டம் பார்த்தனர். அவர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

பல மதுபானக்கடைகளில் பெரிய திரையை வெளியிலேயே வைத்து மேசை கதிரை போட்டு மதுபானங்களைப் பரிமாறினர். ஆனால் பெரோனி என்ற உணவகம் சற்று வித்தியாசமாக ஓர் அறிவிப்பை வைத்திருந்தது. மன்னிக்கவும் இன்று சேவிஸ் (பரிமாறல்) கிடையாது காரணம் இத்தாலி விளையாடுகிறது என்று.

# கர்மவீரர் காமராஜர்

## மீள்பார்வை 20

முருக-தனுஷ்கோடி



''அப்படியானால் நான் தேர்தலுக்கு நிற்கவில்லை'' என்று கூறி, மேற்கொண்டு காமராஜை ஐயங்கார் வற்புறுத்தவில்லை. தொண்டர்களுக்கு நல்ல தலைவராக விளங்கிய காம ராஜ், தன் தலைவருக்கு நல்ல தொண்டராகவும் விளங்கி னார் என்பதற்குச் சான்றுகள் இன்னும் இதுபோல் நிறைய உண்டு.

### 12. ராஜாஜியுடன் மோதல்

1942ல் ஆகஸ்டு புரட்சியில் குதித்துக் கைதான தலைவர்கள் 1945இல் ஒருவர் பின் ஒருவராக விடுதலை செய்யப்பட்ட போது, வைஸ்ராய் லார்ட் வேவல் பாரதத் தலைவர்கள் பலரையும் அழைத்துச் சமரசம் பேசினார். முன்னாள் முதல் அமைச்சர் என்ற முறையில் ராஜாஜியையும் அழைத்துப் பேசினார். இந்த நேரத்தில் ராஜாஜி மீண்டும் காங்கிரஸில் சேர முயன்றார். இதற்குக் கடும் எதிர்ப்பு இருந்தது. 1942ஆம் ஆண்டு மே மாதம் அலகாபாத்தில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் நடைபெற்ற போது பாகிஸ்தானைப் பற்றி ராஜாஜி ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். இதற்கு ஆதரவாக 15 ஓட்டுக்களும், எதிர்த்து 120 ஓட்டுக்களும் கிடைத்தன. உடனே ராஜாஜி காரியக் கமிட்டியில் இருந்தும், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் இருந்தும் ராஜினாமா செய்தார்.

தீர்மானம் தோற்றாலும் தன்னுடைய போராட்டம் தொடர்ந்து நீடிக்கும் என்று அவர் அறிவித்தார்.

காங்கிரஸுக்கு விரோதமாக ராஜாஜி கிளம்பியதால், அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கத் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி நோட்டீஸ் கொடுத்தது.

ராஜாஜிக்கு ஜூலை 15ஆம் திகதி காந்திஜியே கடிதம் எழுதினார். காங்கிரஸ் உறுப்பினர் பதவியையும் சட்டசபை உறுப்பினர் பதவியையும் ராஜினாமா செய்யும்படி தாம் எழுதிய கடிதத்தில் காந்திஜி குறிப்பிட்டிருந்தார். ராஜாஜி ராஜினாமா செய்தார். ஆகஸ்டுப் புரட்சியையும் எதிர்த்தார்.

இவ்வளவுக்கும் பிறகு, மறுபடியும் ராஜாஜி காங்கிரஸில் சேர முயற்சித்ததும், வைஸ்ராயுடன் சமரசம் பேச முயன்றதும், சிறையில் வாடிய தேசபக்தர்களுக்குக் கவலையை அளித்தது.

திடீரென்று ஒரு செய்தி வெளிவந்தது! தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்குத் திருச்செங்கோட்டிலிருந்து ராஜாஜி தேர்ந்தெடுக்கப்பட்டார் என்ற செய்திதான் அது. தமிழ்நாடு காங்கிரஸ் தலைவருக்குத் தெரியாமல் திருச்செங்கோட்டில் எப்போது, எப்படித் தேர்தல் நடந்தது? காங்கிரஸில் இருந்து ராஜினாமா செய்த ராஜாஜி தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டது எப்படி?

காமராஜ் ஓர் அறிக்கை வெளியிட்டார். ராஜாஜியைக் காங்கிரஸில் சேர்க்கக் கூடாது என்ற எதிர்ப்புப் பலம் அடைந்தது. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தை 1945 ஆம் ஆண்டு அக்டோபர் 31 ஆம் திகதியன்று மதுரையில் கூட்டுவது என முடிவு எடுக்கப்பட்டது. ஆகஸ்டுப் போராட்டத்திற்குப் பின்னர் நடக்கும் முதல் கமிட்டிக் கூட்டம் இதுதான்! பார்லிமெண்டரிக் கமிட்டியையும் இந்தக் கூட்டம் தான் தேர்ந் தெடுக்க வேண்டும். சட்டசபைக்குப் போட்டியிடும் வேட்பா ளர்களைப் பார்லிமெண்டரிக் கமிட்டி தான் தேர்ந்தெடுக்கும்.

ராஜாஜி கோஷ்டியினர் மெதுவாகக் களத்தில் இறங்க ஆரம்பித்தனர். எண்பது பேர் கையெழுத்திட்டு ஒரு தீர்மானத்தைத் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்கு அனுப்பினர். தமிழ்நாடு காங்கிரஸ் வேலைகளை நடத்தும் பொறுப்பை ஏற்க ராஜாஜியை அழைக்க வேண்டும் என அவர்கள் அந்தத் தீர்மானத்தில் கூறியிருந்தனர்.

ராஜாஜி கோஷ்டியினரின் இந்தச் செயல் எதிர்க் கோஷ்டியினருக்கு எரிச்சலை உண்டு பண்ணியது. ''தமிழ்நாட்டில் ராஜாஜிக்கு எதிராக உள்ள அணியின் பலத்தையும், அபிப்பிரயத்தையும் காட்டியே தீருவேன்'' என்று சபதமிட்டார். மதுரைச் சிதம்பர பாரதி. உடனே, திருப்பரங்குன்றத்தில் அக்டோபர் 30 ஆம் திகதியன்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்துக்கு ஒருநாள் முன்னதாக தமிழ்நாடு காங்கிரஸ் ஊழியர் மாநாடு ஒன்றைக் கூட்டச் சிதம்பர பாரதி ஏற்பாடு செய்தார்.

ஆகஸ்டுப் புரட்சிக்குப் பின் தமிழ்நாட்டில் இதுவே முதல் மாநாடாய் அமைந்தது. ஆயிரமாயிரம் ஊழியர்கள் மாநாட்டில் கலந்துகொள்ளவும், அவர்கள் தங்கவும் மற்றும் உணவு வசதியையும் முன்னின்று சிதம்பர பாரதி செய்தார்.

30ஆம் திகதி காலையில் தலைவர்கள் வந்து இறங்கினார்கள். அவர்களுக்குப் பிரமாதமான வரவேற்பு அளிக்கப்பட்டது. முன்னதாகவே மதுரை வந்து தங்கியிருந்த ராஜாஜி திருப்பரங்குன்ற மாநாட்டின் சிறப்பைப் பற்றிப் பார்த்தவர்களிடம் கேட்டார். தனக்குச் சாதகமாக நிலைமை இருக்காது என்பதைத் தெரிந்து கொண்டார். நேராகக் காமராஜைச் சென்று பார்த்தார் ராஜாஜி.

''திருப்பரங்குன்றம் மாநாட்டிற்கு நான் வரலாமா?'' என்று கேட்டார் ராஜாஜி.

''தாராளமாய் வரலாமே! மாநாட்டிற்கு வருவதற்கு என்னிடம் ஏன் கேட்கிறீர்கள்'' என்றார் காமராஜ்.

''நீங்கள் என்னை அழைத்தால் நான் மாநாட்டிற்கு வருகிறேன்'' என்று கூறினார் ராஜாஜி. தாமாகப் போகாமல் காமராஜ் அழைத்துத்தான் போனதாக இருக்கவேண்டும் என்று ராஜாஜி நினைத்தார். அதற்குக் காமராஜ் இடம் கொடுக்கவில்லை. எதுவும் சரிப்பட்டு வராது என்று நினைத்த ராஜாஜி அன்று, 30 ஆம் திகதி காலையிலேயே குற்றாலம் புறப்பட்டுச் சென்றார். அவர் புறப்பட்டுச் சென்றபோது திருப்பரங்குன்றம் மாநாடு ''ஓகோ''வெனக் களை கட்டியிருந்தது.

மாநாட்டுப் பந்தலில், காலையில் முத்துராமலிங்கத் தேவர் கொடி ஏற்றினார். மாலை 5 மணிக்கு மாநாடு கோலாகலமாக ஆரம்பமாயிற்று. மாநாட்டை முத்துரலிங்க முதலியார் ஆரம்பித்து வைத்தார். மாநாட்டிற்குக் கல்லிடைக்குறிச்சி தேசபக்தர் எக்ஞேஸ்வர சர்மா தலைமை வகித்தார். ''ராஜாஜிக்குத் தமிழ்நாடு காங்கிரஸில் தலைமைப் பதவி அளிக்கக் கூடாது'' என்று தீர்மானம் போடப்பட்டது. இந்தத் தீர்மானம் முன்மொழியப் பட்டபோது பலத்த ஆரவாரமும் கரகோஷமும் கிளம்பின.

எண்பது பேர் கையெழுத்துப் போட்டு அனுப்பிய தீர்மானம் என்ன ஆயிற்று? அதன் கதி என்ன? என ராஜாஜி கோஷ்டியினர் பரபரப்புடன் இருந்தனர். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் மறுநாள் மாலை கூடுவதற்குமுன் சமரசப் பேச்சு நடந்தது. தங்கள் கோஷ்டிக்கு கமிட்டியில் மெஜாரிட்டி இருக்காது என ராஜாஜி கோஷ்டியினர் திட்டவட்டமாக எண்ணினார்.

கூட்டம் ஆரம்பம் ஆனது. காமராஜ் பேசினார். ''காங்கிரஸினுடைய தீர்மானங்களை ராஜாஜி ஏற்று நடப்பதாக இருந்தால் காங்கிரஸுக்கு அவர் வருவதைப் பற்றி ஆட்சேபம் இல்லை. இதற்கு எதிராக நான் எதுவும் சொல்வதற்கும் இல்லை. கூட்ட ஆரம்பத்திலேயே இதைச் சொல்கிறேன். ஆகவே உங்கள் தீர்மானத்தை வாபஸ் பெறவேண்டும்'' என்று காமராஜ் கூறினார். உடனே ராஜாஜி கோஷ்டியினர் கொடுத்திருந்த தீர்மானத்தை வாபஸ் பெற்றுக் கொண்டனர். (தொடரும்)

# செய்தித் துளிகள்

## சிவதொண்டன் வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

சிவதொண்டன் நிலையத்தினால் வெளியிடப்படும் சிவதொண்டன் மாதாந்த இதழில் ஆடி மாத ''சிவதொண்டன்'' வெளிவந்துள்ளது. (க-9)

## தேர்த்திருவிழா

(யாழ்ப்பாணம்)

உடுப்பிட்டி சந்திரசேகர வீரபத்திர சுவாமி கோவிலின் வருடாந்த மஹோற்சவம் கடந்த 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு தேர்த்திருவிழா இடம்பெறும். அதனைத் தொடர்ந்து நண்பகல் 1.00 மணிக்கு அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். மறுநாள் காலை தீர்த்தோற்சவம் நடைபெறும். (கு)

## நிதியுதவி

(கோப்பாய்)

உரும்பிராய் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் வித்தியாலயத்தின் தளபாடக் கொள்வனவிற்காக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வரவு செலவுத் திட்டத்திலிருந்தும் ஐம்பதாயிரம் ரூபாவை ஒதுக்கியுள்ளார். (க-79)

## வழிகாட்டற் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

ஐ.பி.எம்.எஸ். நிறுவனத்தின் அனுசரணையுடன் இவ்வாண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான வழிகாட்டற் கருத்தரங்கு இன்று சனிக்கிழமை காலை பத்து மணியளவில் யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறுவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இக் கருத்தரங்கில் உயர்தரப் பரீட்சைக்குப்பின்னரான உயர்கல்வி பற்றிய விளக்கங்களும் அவற்றிற்கான வாய்புக்கள் பற்றியும் கருத்துக்கள் வழங்கப்படவுள்ளதாகவும் இக் கருத்தரங்கில் கல்வி வலயத்தைச் சார்ந்த அதிகாரிகளும் கலந்து சிறப்பிக்கவுள்ளதாகவும் மேற்படி நிறுவனத்தின் நிர்வாக உத்தியோகத்தர் ம.விஜிதா தெரிவித்துள்ளார். (அ)

## சோதனையின் பின்னரே பாடசாலை செல்ல அனுமதி

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மற்றும் மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை ஆகியவற்றில் கல்வி புகட்டும் ஆசிரியர்கள் அனைவரும் சோதனைக்கு உட்படுத்தப் பட்ட பின்னரே பாடசாலைகளுக்கு செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

மேற்படி பாடசாலைகள் இராணுவத்தின் பாதுகாப்பு பிரதேசத்திற்குள் அமைந்திருக்கின்றமையால் இதுவரை காலமும் வெளியார் அல்லது சந்தேகத்துக்கு இட மான நபர்களையே படையினர் சோதனைக்கு உட்படுத்தி வந்த னர்.

எனினும் தற்போது ஏற்பட்டுள்ள பாதுகாப்பு படையினர் மீதான தாக்குதல்கள் காரணமாக தமக்கு பாதுகாப்பு அச்சம் ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் தான் தாம் அனைவரையும் சோதனை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்தாகவும் சோதனை நிலைய இராணுவத்தினர் ஆசிரியர்களிடம் தெரிவித் துள்ளனர். (க-55)

## குருபூர்ணிமா பஜனை

(கற்கோவளம்)

பருத்தித்துறை சாயிமந்திரில் எதிர்வரும் 10ஆம் திகதி திங்கட்கிழமை குருபூர்ணிமா தினத்தன்று காலை பாதபூஜையும் பஜனையும் மதியம் நாராயண சேவையும் நடைபெறவுள்ளது. (கு-104)

## பதவி உயர்வு

(பருத்தித்துறை)

புலோலி கமநலச் சேவை நிலைய பிரதம இலிகிதர் திருமதி விசாலாட்சி தனபாலசிங்கம் கமநல சேவைத் திணைக்களத்தால் இலிகிதர் தரம் Iக்குப் பதவி உயர்த்தப் பட்டுள்ளார். (க-52)

## ஆன்மீகச் சொற்பொழிவு

புலோலி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீக சொற்பொழிவு தொடரில் ஞாயிற்றுக்கிழமை காலை 10மணிப் பூசை முடிவுற்றதும் ''வாழ்க்கையின் நான்கு தருமங்கள்'' என்னும் விடயம் பற்றி இரா. திருமாறன் ஆசிரியர் ஆன்மீக சொற்பொழிவாற்றுவார். (க-35)





கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் சனசமூக நிலைய முன்பள்ளி விளையாட்டுவிழா நிகழ்வை யாழ். வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் த.பஞ்சலிங்கம் மங்களவிளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும், அருகில் நிலையச் செயலாளர் ஆ.கண்ணன், தலைவர் மு.விக்னேஸ்வரன் ஆகியோர் நிற்பதையும் முதலாவது படத்தில் காணலாம். மழலைகள் அணிநடைக் கண்காட்சிக்கு ஆசிரியைகள் திருமதி அ.வெள்ளியங்கிரிநாதன், திருமதி த.சந்திரவதனன் ஆகியோருடன் தயார் நிலையிலிருப்பதை இரண்டாவது படத்தில் காணலாம். (படங்கள்:-கோப்பாய்நிருபர்)

# சர்வதேச விண்வெளி நிலையத்தை சென்றடைந்தது டிஸ்கவரி ஓடம்

(ஹூஸ்டன்)

பூமியில் இருந்து கடந்த புதன்கிழமை புறப்பட்ட டிஸ்கவரி விண்வெளி ஓடம், நேற்று முன்தினம் இரவு சர்வதேச விண் வெளி நிலையத்தைச் சென்றடைந்து விண்ணில் அமைக்கப்பட்டுவரும் சர்வதேச விண்வெளி



நிலையத்தை இந்திய நேரப்படி நேற்று முன்தினம் இரவு 8.22 மணிக்கு டிஸ்கவரி சென்றடைந்தது. பிரச்சினைக்குரிய எரிசக்தி டாங்கை தொடர்பான எந்த இடையூறும் இது வரை ஏற்படவில்லை என நாசா விஞ்ஞானி கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

ஓடத்தின் பின்புறம் டாங்கை சுற்றி அமைக் கப்பட்டுள்ள செராமிக் டைல்ஸ் எதிர்பார்த்த படி பலன் கொடுக்கும் என விஞ்ஞானிகள் நம்புகின்றனர். ஓடத்தில் உள்ள விஞ்ஞானி கள் லேசர் கமரா மூலம் எரிபொருள் டாங் பகுதியைக் கண்காணித்து தகவல்களை தந்து கொண்டுள்ளனர். மேலும் விண் வெளி நிலையத்திலுள்ள விஞ்ஞானிகளும் இந்த செறமிக் டைஸ்சை படம் பிடித்துள்ள னர். இதற்கு வசதியாக நிலையத்தில் இறங் கும் முன்னர் டிஸ்கவரி ஓடம் லாவகமாக திருப்பப்பட்டது. நேற்று முன் தினம் வரை டாங் பகுதியில் எந்த ஆபத்தும் இல்லை என விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவித்துள் ளனர்.

சர்வதேச விண்வெளி நிலைய உருவாக்கப் பணிக ளை வருகிற 2010ஆம் ஆண்டுக்குள் முடிக்க இந்த பயணம் மிக முக்கியமான தாகக் கருதப்படுகிறது. அதே போல் இதற்குத் தேவையான பொருட்களைக் கொண்டு செல்ல டிஸ்கவரி ஓடம் மிக பொருத்தமானதாகக் கருதப் படுகிறது.

ஏழு விஞ்ஞானிகள் மற் றும் இரண்டாயிரத்து 272 கிலோ பொருட்களை தற்போது சுமந்து சென்றுள்ளது டிஸ்கவரி.

இதில் சென்றுள்ள ஜெர்மன் விஞ்ஞானி தோமஸ் ரீய்டர் விண் வெளி நிலையத்தில் இறக்கி விடப்படுவார். மற்ற விஞ்ஞானிகள் சில நாட்கள் விண்வெளி நிலையத்திலேயே தங்கி இருப்பர். (தி)

WORLD NEWS உலக தரிசனம்



ஆப்கன் அதிபர் ஹமீதுகர்சாய் ஜப்பான் சென்றார். அங்கு அவர் மன்னர் அஹிடோவை சந்தித்து பேசினார்.

# காசா நிலப்பகுதியில் மீண்டும் இஸ்ரேல் இராணுவ வாகனங்கள்

(காசா சிட்டி)

பாலஸ்தீனர்களிடம் திரும்ப ஒப்படைத்த காசா நிலப்பகுதியில் 10 மாதங்களுக்குப் பிறகு இஸ்ரேல் இராணுவ வாகனங்கள் கடந்த வியாழக்கிழமை மீண்டும் நுழைந்தன. டாங்குகள், கவீச வாகனங்கள், தரைப்படைப் பிரிவுகள் ஆகியவை அதில் இருந்தன.

இஸ்ரேலின் ஆஷ்கெலான் என்ற தெற்கு நகரத்தின் மீது இரண்டாவது நாளாக கடந்த புதன்கிழமை இரவும் ஏவு கணைகளை வீசி தாக்குதல் நடத்தினர். பாலஸ்தீனத் தீவிரவா திகள். இதை அடுத்து தங்களுடைய பகுதிக ளின் பாதுகாப்புக் கருதி இஸ்ரேலிய இரா ணுவம் மீண்டும் காசா பகுதிக்குள் நுழைந்து 3 கிலோ மீற்றர் தொலைவுக்கு முன்னே றியது.

துஜித், எலி சினாய், நிசானித் ஆகிய பழைய யூத குடியிருப்புப் பகுதிகளையும் தொழில் பேட்டையையும் இஸ்ரேலிய இரா ணுவம் தங்கள் வசம் மீண்டும் கொண்டு வந் தது. 38 ஆண்டுகள் இப்பகுதியில் குடியிருந்து விட்டு கடந்த செப்டெம்பர் மாதம் தான் இப் பகுதியிலிருந்து இஸ்ரேலியர் வெளியேறி னர் என்பது குறிப்பிடத் தக்கது. (தி)

# ஈராக்கில் கார்குண்டுத் தாக்குதல் 12பேர் பலி;37பேர் காயம்

(பாக்தாத்)

ஈராக் தலைநகர் பாக்தாத்தில் இருந்து 160 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள குபா நக ரம் ஈராக்கிலேயேமிகவும் அமைதியும் புனித மும் நிறைந்த நகராகக் கருதப்படுகிறது.

ஷியா மற்றும் சன்னிப் பிரிவு முஸ்லிம் களுக்கு இடையிலான சண்டையில் புனித ஸ்தலங்களை குறிவைத்து சில நாட்களாக தாக்குதல்கள் நடக்கின்றன.

இந்நிலையில் குபா மசூதிக்கு அருகே. நேற்று முன்தினம் காலை சக்தி வாய்ந்த கார்க் குண்டு வெடித்தது. இதில் 12 பேர் பலியா யினர். மேலும் 37 பேர் காயம் அடைந் தனர். (தி)

# எம்மீதான எந்த நடவடிக்கையையும் சந்திக்கத் தயாராகவே உள்வோம்

## வடகொரியா அறிவிப்பு

(டோக்கியோ)

7 ஏவுகணை சோதனைகளை நடத்திய வடகொரியாமீது பொருளாதார மற்றும் தொழில்நுட்ப தடைவிதிக்க ஐ.நா.பாதுகாப்பு கவுன்சில் ஆலோசித்து வருகிறது. இந் நிலையில் ஐ.நா.எடுக்கும் எந்தவொரு நடவ டிக்கையையும் சந்திக்கத் தயார் என வட கொரியா எச்சரிக்கை விடுத்துள்ளது.

அமெரிக்காவின் பரம எதிரி நாடான வடகொரியா கடந்த புதன்கிழமை ஏழு ஏவுக ணை சோதனைகளை நடத்தியது. அதில்ஒரு ஏவுகணை 15 ஆயிரம் கி.மீ.தூரத்தில் உள்ள இலக்கை தாக்கும் சக்தி கொண்டது. இதனால் அமெரிக்கா மற்றும் வடகொரியாவின் அண் டை நாடுகளான ஜப்பான், தென் கொரியா ஆகியவை கடும் அதிர்ச்சி அடைந்தன.

வடகொரியாவின் அணு திட்டங்களுக்கு ஐ.நா.மூலமாக தடைவிதிக்கச் செய்யும் முயற்சியில் அமெரிக்கா இறங்கியுள்ளது. அதன் ஒரு பகுதியாக வடகொரியாமீது நிதி மற்றும் பொருளாதார தடைவிதிக்கும் தீர்மா னத்தை ஐ.நா.பாதுகாப்பு கவுன்சிலில் கொண்டுவர அமெரிக்காவும் ஜப்பானும் முடிவு செய்துள்ளன. வடகொரியாவுக்கு வழங்கப்படும் பொருளாதாரம் மற்றும் தொழில் நுட்ப உதவிகளை அந்நாடு ஏவுக ணை தயாரிப்பதற்கு பயன்படுத்துவதாக குற்றம் சாட்டப்பட் டுள்ளது.

இந்த பிரச்சினை குறித்து விவாதிப்ப தற்காக பல்வேறு நாடுகளின் ஐ.நா.தூதர் கள் கூட்டம் புதன்கிழமை நடந்தது. மொத்தம் 90 நிமிடங்கள் நடந்த அந்தக் கூட்டத்தில் வல்லுநர்களும் ஐ.நா.பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலுக்கான தற்போதைய தலைவரும் ஐ.நாவுக்கான பிரான்ஸ் தூதருமான ஜீன் மேரிக் கூறும்போது வடகொரியாவின் ஏவுக ணை சோதனை குறித்து அனைத்து உறுப் பினர்களும் கவலை தெரிவித்தனர் என்றார்.

சர்வதேச அரங்கில் இருந்து வடகொரி யாவை தனிமைப்படுத்த வேண்டும் என அமெரிக்க அதிபர் புஷ் விரும்புகிறார். அதே நேரத்தில் அமெரிக்கா மற்றும் ஜப்பான் நாடுகளின் முயற்சிக்கு வீட்டோ அதிகாரம் படைத்த ரஷ்யா மற்றும் சீனா நாடுகள் முட் டுக்கட்டை போட்டுள்ளன. வடகொரியா கடு மையான நடவடிக்கை எடுப்பதற்கு பதில் ராஜதந்திர ரீதியிலான தீர்வு காண ஒரு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்று அவை ஐ.நாவுக்கு பரிந் துரைத் துள்ளன.

ஆனால் ஐ.நா.எடுக்கும் எந்தவித நட வடிக்கையையும் எதிர்கொள்ள தயாராக இருப்பதாக வடகொரியா தெரிவித்துள்ளது. ஐ.நாவுக்கான வடகொரியாவின் துணை தூதர் ஹன் சாங்ரியோல் கூறும்போது வட கொரியா நடத்திய ஏவுகணைகள் சோதனை என்பது வழக்கமாக நடை பெறும் இராணுவ சோதனையே. ஏவுகணை சோதனை நடத்து வது இறையாண்மை மிக்க ஒரு அரசின் உரி மை ஐ.நா.தடை விதித்தால் அதை எதிர் கொள்வது உட்பட அடுத்தகட்ட நடவடிக்கைக ளை நாங்கள் மேற்கொள்வோம் என்றார். (தி)

# அனல் காற்று வீசி 50 பேர் பலி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் கடந்த சில வாரங்களாக கடும் வெயில் கொளுத்துகிறது. பங்கர் மாநில த்தில் 18 மாவட்டங்கள் மற்றும் சிந்து மாகா ணத்தில் கைட்பூர் மாவட்டம் ஆகியவைதான் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக கடந்த 2 நாட்களாக வெயில் இதுவரை இல்லாத அளவுக்கு கொளுத்து கிறது. 122 டிகிரி வெயில் கடந்த 2 நாட்களாக நீடிக்கிறது. அனல் காற்று வீசியது.

அனல் காற்றுக்கும் வெயிலுக்கும் தாக் குப்பிடிக்க முடியாமல் 50 பேர் சுருண்டு விழுந்து செத்தனர்.

150க்கும் மேற்பட்டவர்கள் மயங்கி விழுந்து ஆஸ்பத்திரியில் அனு மதிக்கப்பட் டுள்ளனர். இன்னும் சில நாட்களுக்கு வெயில் நீடிக்கும் என்று அறிவிக் கப்பட்டு ள் ளது. (தி)



இந்திய சீன எல்லை பகுதியில் வர்த்தகத்திற்கென 44 ஆண்டுகளாக மூடப்பட்டிருந்த நாதுல்லா கணவாய் வழி நேற்று திறந்து விடப்பட்டது. முன்னதாக வரவேற்பு விழா ஏற்பாடுகள் நடந்தது.

# வெடிவிபத்தில் 43 பேர் பலி

(பீஜிங்)

சீனாவின் சாங்கி மாகாணத்தில் உள்ள ஒரு விவசாய கிராமத்தில் நேற்று திடீர் என்று வெடிவிபத்து ஏற்பட்டது. விவசாயி ஒருவர் தனது வீட்டில் ஏராளமான வெடி மருந் துகளை பதுக்கி வைத்திருந்தார். அந்த வெடி மருந்து கள் திடீர் என்று வெடித்தன. இதில் அந்தக் கிராமத்தில் உள்ள பல வீடுகள் இடிந்து தரை மட்டம் ஆனது. சில வீடுகள் தீப்பிடித்து எரிந் தன. இந்த வெடிவிபத்தில் 43 பேர் பலியானார்கள். இந்த நிலையில் ஹெனான் மாகா ணத்தில் கட்டடப் பணி நடந்து கொண்டிருந்த 6 மாடி கட்டடம் இடிந்து விழுந்தது. இதில் 30 பேர் இடிபாடுகளில் சிக்கி பலியானார்கள். (தி)

ஒரு மனிதனின் உண்மையான தன்மையை அறிய வேண்டுமானால் அவன் கையில் அதிகாரத்தைக் கொடுத்துப்பார்க்க வேண்டும்.
-இங்கர்சால்

வலம்புரி

# படையினரின் குறுக்குப்பாதை தளபதிகள் தடுப்பார்களா?

யாழ்ப்பாணத்தில் தற்போது பயந்த நிலையிலேயே மக்கள் வாழ்கின்றனர். எந்நேரமும் எதுவும் நடக்கலாம் என்பதே யாழ். குடாநாட்டு மக்களின் தற்போதைய நிலைப்பாடு.

ஆயுதம் ஏந்திய படையினர் வீதிகளில் காத்து நிற்கின்றனர். இவ்விதம் ஆயுதம் ஏந்தியவண்ணம் படையினர் நிற்பதற்கு காரணம் என்ன?

தமிழ் மக்களை பாதுகாப்பதற்காகவா? இல்லவே இல்லை. இலங்கையின் அரசாட்சிக்குள் யாழ்ப்பாணம் உள்ளது என்பதை நிரூபிப்பதே அதன் நோக்கமாகும்.

இலங்கை பௌத்த சிங்கள நாடு. இங்கு வேறெந்த இனத்தவர்களுக்கும் இடம் இல்லை. இதன் அடிப்படைச்சின்னமே ஆயுதம் ஏந்தியவாறு யாழ்ப்பாண வீதிகளில் படையினர் காவல் செய்கின்றனர்.

இதனிடையே வாகனங்களில் செல்வோரை மறித்து நடத்தும் சோதனை ஏன் ? எதற்கு என்பது தெரியாமல் உள்ளது. இதைவிட மேலும் பல பிரச்சினைகளை படையினரால் யாழ்ப்பாண மக்கள் எதிர்நோக்குகின்றனர்.

அதில் ஒன்று படையினரின் ரோந்து நடவடிக்கையாகும். வீதிகளில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினர் மக்கள் குடியிருப்புக்களின் ஊடாக மதில் பாய்ந்து செல்வது அடிப்படை மனித உரிமை மீறலாக உள்ளது.

படையினர் என்ற ஒரே காரணத்திற்காக மதில் பாய்ந்து வீடுகளின் ஊடாக குறுக்குப் பாதைகளை அமைத்துக் கொள்வதும் வேலிகளை வெட்டி பாதை அமைப்பதும் எவ்வகையில் நியாயமானது?

மதில் பாய்ந்து வீடுகளினூடாக படையினர் செல்வதால் , சிறுவர்கள் பயப்பீதியடைந்து உளரீதியாக பாதிப்படைகின்றனர்.

அதே நேரம் இவ்விதம் படையினர் மக்களின் குடியிருப்புக்களின் ஊடாக செல்வதால் எந்நேரமும் உயிராபத்து ஏற்படலாம் என்ற பயப்பீதியும் மக்களை வதைக்கிறது. இதனால் தமது வீடுகளில் இருந்து வெளியேறும் பரிதாப நிலை ஏற்பட்டுள்ளது.

இதனை படைத்தலைமைகள் இதுவரை புரிந்து கொள்ளாமல் இருந்தால் அதைத் தமது கவனத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டும்.

படையினர் வீடுகளின் ஊடாக குறுக்கு வழிப்பாதைகளை அமைப்பதை தவிர்க்க வேண்டும்.

யாழ்.குடாநாட்டுப் படைத்தளபதிகள் இதனை கவனிப்பது கட்டாய கடமையாகும். இதை விட முக்கிய வீதிகளில் படையினரின் வாகன அணியால் மக்கள் படும் அவஸ்தை சொல்லுந்தரமன்று.

படையினரின் வாகன அணிகளுக்காக மக்களின் போக்குவரத்து தடுக்கப்படுகின்றது.

மணித்தியாலக்கணக்காக தடுத்து வைக்கப்படுவதால் உரிய நேரத்தில் உரிய இடத்திற்கு செல்ல முடியாமல் மக்கள் தவிக்கின்றனர்.

எனவே இது விடயத்திலும் படைத்தலைமைகள் உரிய நடவடிக்கைகளை எடுத்து பொதுமக்களுக்கு ஏற்படும் சிரமங்களை தவிர்க்க வேண்டும்.

# நாட்டின் பொருளாதார வளர்ச்சியை அரசு எப்படி உறுதிப்படுத்தப் போகிறது?

## -ஹேமகுமார நாணயக்கார கேள்வி

(கொழும்பு)

நாட்டின் பொருளாதாரம் 8 சதவீதத்தால் அதிகரித்துள்ளது என்றால் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் ஏன் அதிகரித்துள்ளன என்று ஐ.தே.கவின் பாராளுமன்ற உறுப்பினர் ஹேமகுமார நாணயக்கார கேள்வி எழுப்பினார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

நாட்டில் பொருளாதாரம் 8 வீதத்தால் அதிகரித்துள்ளது என்றால் அதனை நாம் வரவேற்கின்றோம். அவ்வாறு அதிகரிக்கப்பட்டிருந்தால் வெளிநாட்டு முதலீடுகள் ஏன் குறைந்துள்ளன? ஒரு நாட்டின் பொருளாதாரம் 8 வீதம் வளர்ச்சியடைய வேண்டுமாயின் வெளிநாட்டு முதலீடுகள் 35 சதவீதமாக இருக்க வேண்டும். ஆனால் இலங்கையில் ஏற்பட்டுள்ள பதற்றமான சூழ்நிலை காரணமாக வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கையிலிருந்து வெளியேறி வருகின்றனர்.

இந்நிலையில் இலங்கையின் பொருளாதாரம் 8 சதவீதத்தால் வளர்ச்சியடைந்துள்ளது என்று அரசாங்கம் எவ்வாறு நிரூபிக்கப் போகின்றது.

நாட்டில் அந்நிய செலவாணியை பெற்றுத் தருகின்ற தேயிலை கைத்தொழில் வீழ்ச்சி கண்டு வருகின்றது. அரசாங்கத்தின் பொய்யான வாக்குறுதிகளினால் சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்ட உரமானியம் சிறு தேயிலைத் தோட்ட சொந்தக்காரர்களுக்கு இன்று வரை கிடைக்கவில்லை. இதனால் பல தேயிலை தோட்டங்கள் காடாகி வருகின்றன. தேயிலைத் தொழிற்சாலைகளும் மூடப்பட்டுள் ளன.

இந்நிலையில் நாட்டில் பொருளாதாரம் வளர்ச்சியடைந்து வருகின்றது என்று அரசாங்கம் எவ்வாறு உறுதிப்படுத்தப் போகின்றது என்றும் கேள்வி எழுப்பினார். (த-7)

## சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களில் உள்ள

# ஐந்து வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கான போஷாக்குத் திட்டம் அறிமுகம்

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த ஐந்து வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்கான போஷாக்குத் திட்டமொன்றினை சிறுவர் அபிவிருத்தி அமைச்சு ஆரம்பிக்கவுள்ளது.

வடக்கு-கிழக்கு மற்றும் தென்பகுதி மாகாணங்களில் இத் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. இத் திட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்ட சிறுவர் ஒருவருக்கு வாராந்தம் 800 ரூபா பெறுமதியான போஷாக்குணவுகள் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் இயங்கி வரும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக வழங்கப்படவுள்ளன.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர்களின் போஷாக்கு மட்டத்தை அதிகரிக்கும் நோக்கத்துடன் இத் திட்டம் அமுல்படுத்தப்படுவதாகவும் மூன்று மாதங்களுக்குத் தொடர்ச்சியாக போஷாக்கு உணவு கள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, 2006 ஆம் ஆண்டை தேசிய சிறுவர் ஆண்டாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிரகடனம் செய்துள்ளதையடுத்து சிறுவர்களுக்கு நன்மையளிக்கும் வகையான பல்வேறு செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் சிறுவர் அபிவிருத்தி அமைச்சு அறிவித்துள்ளது. (த-7)

# அரசியல் யாப்பின் 18ஆம் திருத்த முயற்சியில் தோல்வியடைந்தது அரசாங்கம் !

(கொழும்பு)

அரசியல் யாப்பின் 18ஆவது திருத்த முயற்சியில் அரசாங்கம் தோல்வியடைந்துவிட்டது. நாடாளுமன்றில் இத் திருத்தத்துக்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவளிக்க மறுத்துவிட்டது. இத் திருத்தம் மேற்கொள்ளளப்படுவதற்கு முன்னதாக அரசியல் யாப்புச் சபையைச் செயற்படுத்த வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி நிபந்தனை விதித்துள்ளது.

அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா நாடாளுமன்றில் இத் திருத்தம் தொடர்பாக பேசுகையில், ஐக்கிய தேசியக் கட்சி முன்னர் ஆதரிப்பதாக அறிவித்துவிட்டு இப்போது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு விட்டது என்றார். அரசியல் யாப்பின் 18ஆம் திருத்தத்துக்கு முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவளித்துள்ளது.

மாகாணங்களில் மேல்முறையீட்டு நீதிமன்றத்தை அமைக்க வகை செய்யும் இந்த 18ஆவது அரசியல் யாப்புத் திருத்தம் நிறைவேற அரசாங்கத்துக்கு நாடாளுமன்றத்தில் குறைந்த பட்சம் 150 வாக்குகள் தேவை. ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவளிக்க மறுத்தமையினால் அரசாங்கத்தால் இத் திருத்தத்தை நிறைவேற்ற முடியவில்லை. (த)

# பேச்சுப் போட்டியில் பங்குபற்றலாம்

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் வருடம் தோறும் மயில்வாகன சுவாமிகளின் குருபூசை தினத்தையொட்டி மாணவர்களிடையே நடாத்திவரும் பேச்சுப்போட்டி இம்முறையும் நடத்தவுள்ளது.

இப்பேச்சு போட்டி மூன்று பிரிவுகளாக நடைபெறவுள்ளது. பிரிவு 1இல் தரம் 6-7 மாணவர்களும், பிரிவு 2 இல் தரம் 8-9 மாணவர்களும், பிரிவு -3இல் தரம் 10-11 மாணவர்களும் பங்குபற்றலாம். பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் தாங்கள் கல்வி கற்கும் தரம், பிறந்த திகதி பாடசாலை என்பவை தொடர்பான விபரங் களை அதிபர் மூலம் அல்லது பெற்றோர் மூலம் உறு திப்ப டுத்தி எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்பாக தபால் மூலமோ அல்லது நேரில் கையளிக்கலாம்.

விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கு பேச்சுப்போட்டி தொடர்பான விடயம் அனுப்பிவைக்கப்படும். போட்டிகள் 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறும். வெற்றி பெற்ற மாணவர்களுக்கு மயில்வாகன சுவாமிகளின் 21 ஆவது குருபூசை தினமான ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதி திங்கட்கிழமை பணத்தொகை பரிசுகள், சான்றிதழ்கள் என்பன வழங்கப்படும்.

மேலதிக விபரங்களைப் பெற விரும்புவோர் "குரு பூசைப் போட்டிக்குழு, சந்நிதியான் ஆச்சிரமம், தொண்டமனாறு" என்ற முகவரியில் தொடர்புகொள்ளுமாறு ஆச்சிரம முதல்வர் மோகனதாஸ் சுவாமிகள் கேட்டுள்ளார். (க-35)

# புலமைப் பரிசிலைப் பெற விண்ணப்பிக்கலாம் !

(கொழும்பு)

க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்து க.பொ.த உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் பொருளாதார வசதிகளற்ற மாணவ, மாணவிகளுக்கு புலமைப் பரிசில்களை வழங்குவதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

இதற்கமைய ஜனாதிபதி அலுவலகம் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

விண்ணப்பதாரரின் குடும்ப வருமானம் (மாதம் ஒன்றுக்கு) 5ஆயிரம் ரூபாவுக்கு மேற்படாமலிருக்க வேண்டும்.

அரசாங்கப் பாடசாலை ஒன்றில் அல்லது கட்டணம் அறவிடாத பாடசாலை ஒன்றில் மாணவராக /மாணவியாக இருக்க வேண்டும். விண்ணப்பதாரர் 2005ஆம் ஆண்டில் நடைபெற்ற க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் முதல் தடவையாக தோற்றி க.பொ.த உயர்தர வகுப்பில் கற்பதற்கான பூரண தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன் விண்ணப்பதாரர் 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பெறுநராக இருத்தல் கூடாது. தெரிவு செய்யப்படும் புலமைப் பரிசில் பெறுநருக்கு க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும்வரை மாதாந்தம் 500 ரூபா வீதம் 24 மாதங்களுக்கு புலமைப்பரிசில் வழங்கப்படும்.

விண்ணப்பதாரர்கள், விண்ணப்பங்களை க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்கு தோற்றுவதற்காக கல்வி கற்ற பாடசாலை அதிபரிடம் எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு முன்னர் கையளிக்க வேண்டும்.

அதிபர் தமது விதப்புரையுடன் கூடிய அந்த விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 27ஆம் திகதிக்கு முன்னர் தமது வலயக் கல்விப் பணிப்பாளரிடம் கையளித்தல் வேண்டும்.

இதுதொடர்பான மேலதிக விபரங்களைப் பெற விரும்புவோர் ஜனாதிபதி நிதியத்தின் W.W.W. Presidents Fund. gov lk என்ற வெப்தளத்தின் ஊடாக விபரங்களைப் பெற முடியும். (க)

# பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைமையகத்தில் ஆந்த்ராக்ஸ் பீதி

(கொழும்பு)

பெற்றோலியக் கூட்டுத்தாபன தலைமையகத்தில் ஆந்த்ராக்ஸ் பீதி ஏற்பட்டது.

கொள்ளுப்பிட்டியில் உள்ள தலைமையகத்தின் வர்த் தகப் பிரிவின் காவலாளி இந்தியாவிலிருந்து வந்த ஒரு கடிதத்தை கடந்த புதன்கிழமை பிற்பகல் பிரித்துப் பார்த்த போது மயக்கமடைந்தார். இதையடுத்து அங்கு பரபரப்பு ஏற்பட்டது. கூட்டுத்தாபன நிறுவன பாதுகாப்புப் பிரிவினர் காவலாளிக்கு முதலுதவி அளித்தனர். அதன்பின்னர் கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு மேலதிக சிகிச்சைக்காக அந்தக் காவலாளியை கொண்டு சென்றனர்.

வர்த்தகப் பிரிவின் குளிர்சாதன இயந்திரங்கள் நிறுத்தப்பட்டு சந்தேகத்துக்குரிய அந்தப் பொடி பரவாதவாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

கொள்ளுப்பிட்டி பொலிஸார் மற்றும் அரச பகுப்பாய்வு திணைக்களத்தினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். சந்தேகத்துக்குரிய அந்தக் கடிதம் பகுப்பாய்வு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்த ஆந்த்ராக்ஸ் பீதியில் கூட்டுத்தாபனத்தின் வர்த்தகப் பிரிவு பணிகள் புதன்கிழமை மாலை வரை பாதிப்படைந்தன. (த)

தினசரி தியானம்
விவேகச் சிந்தனைகள்



கோபத்தாலோ தண்டனையினாலோ எவரையும் திருத்திவிட முடியாது. பொறுமை, அன்பு ஆகியவற்றின் மூலமே மற்றவர்களைத் திருத்தமுடியும்.

சுவாமி விவேகானந்தர்

# அல்வாய், திக்கத்தில் படையினர் சுற்றிவளைப்பு

## தலையாட்டி முன் இளைஞர்கள் நிறுத்தம்

(துன்னாலை)

வடமராட்சி அல்வாய் தெற்கு மற்றும் கிழக்குப் பகுதிகளும் திக்கம் பகுதியும் நேற்று அதிகாலை முதல் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

இதன்போது படையினரால் அழைத்துச் செல்லப்பட்ட இளைஞர்கள் வதிரி டையமன் விளையாட்டுக் கழகத்தில் வைத்து தலையாட்டிக்கு முன்னால் நிறுத்தப்பட்ட பின்னர் வீடு செல்ல அனுமதித்தனர். (ந-101)

# பருத்தித்துறையில் கைதான இரு மாணவர்கள் விடுதலை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை 2 ஆம் குறுக்குத் தெருவில் உள்ள வீட்டில் வைத்து கடந்த ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி கைது செய்யப்பட்ட ஹாட்லிக் கல்லூரியில் உயர்தர வகுப்பில் கல்வி கற்றும் மாணவர்களான கணேசலிங்கம் விஜயகாந், கிருஷ்ணராசா திவாகர் ஆகிய இருவரும் யாழ்.மேல் நீதிமன்றின் கட்டளைக்கு அமைவாக பருத்தித்துறை நீதிமன்றில் வைத்து நேற்று விடுவிக்கப்பட்டனர்.

மேற்படி இரு மாணவர்களும் தலா 25 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும் இரு ஆட்பிணையிலும் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இதேவேளை மாணவன் திவாகரின் தந்தையாரான செல்வராசா கிருஷ்ணராசா தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ந-101)

# விளக்கமறியல் நீடிப்பு

(துன்னாலை)

வல்லை புறாப்பொறுக்கி மற்றும் உடுப்பிட்டிப் பகுதிகளில் வைத்துக் கைது செய்யப்பட்ட பேரின்பராஜ், ஜதீஸ்கரன் ஆகியோரை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி நேற்று உத்தரவிட்டார்.

இவர்கள் வழங்கிய தகவல் மூலம் பெறப்பட்டதாக துப்பாக்கி ஒன்றும் அதற்கான ரவையும் பருத்தித்துறை நீதிமன்றில் பொலிஸாரால் நேற்று ஒப்படைக்கப்பட்டது.

அதனைப் பார்வையிட்ட நீதிபதி அவற்றை இரசாயனப் பகுப்பாய்வுக்கு அனுப்பி வைக்க உத்தரவிட்டார். (ந-101)

# பண்பாட்டியல் முதுமாணி மாணவர்களுக்கான கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தில்,2002 ஆம் ஆண்டில் பண்பாட்டியல் முதுமாணிப் பட்டப் படிப்பை மேற்கொண்டு,

இதுவரை பட்டத்தைப் பூர்த்தி செய்யாதவர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள சேர்.பொன். இராமநாதன் உருவச்சிலையருகில் நடைபெறவுள்ளது.

இதில் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் வேண்டுகின்றனர். (ந)

# திருகோணமலையில் நேற்று ஒருவர் சுட்டுக் கொலை

(திருகோணமலை)

திருகோணமலை கணேஷ் வீதியில் நேற்றுக் காலை ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

தனது 4 வயதுப் பிள்ளையை பாலர் பாடசாலைக்கு கூட்டிச் சென்றவேளை இடைமறித்த துப்பாக்கிதாரிகள் இருவர்தனது தந்தையைச் சுட்டுக் கொன்றதாக அவருடன் சென்ற பிள்ளை பொலிஸாரிடம் தெரிவித்துள்ளது.

இராணுவத்திற்குத் தகவல் கொடுத்தவர் என்ற வகையில் விடுதலைப்புலிகளே இவரை சுட்டுக் கொன்றதாக திருகோணமலைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் துலான் பாகிந்த அலி (வயது-41) என்று அடையாளம் காணப்பட்டுள்ளார். (ந-9)

# ஒருவர் விடுதலை

கற்பிட்டியில் காணாமல் போனதாகக் கூறப்பட்டு பின்னர் படையினரால் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட 6 இளைஞர்களில் ஒருவர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மயூரன் என்பவரே விடுவிக்கப்பட்டவராவார். பாடசாலையில் கல்வி பயிலும் உயர்தர வகுப்பு மாணவன் என உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே விடுதலை செய்யப்பட்டதாகத் தெரியவருகின்றது. (ந-9)

# வெலிக்கந்தையில் சிங்களப் பெண் கைது

## விடுதலைப்புலிகளுடன் தொடர்புள்ளவராம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையவர் என்று கூறி வெலிக்கந்தையில் சிங்களப் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெலிக்கந்தையைச் சேர்ந்த 28 வயதான இப் பெண் தமிழ் இளைஞரை திருமணம் செய்து அமெரிக்காவில் வசித்து வந்தார்.

இலங்கைக்குத் திரும்பி அவர் தனது பெற்றோருக்குச் சொந்தமான நாவல வீதியிலுள்ள வீட்டில் தனியே தங்கியிருந்தார்.

அவரது கணவர், பெற்றோர் மற்றும் சகோதரர்கள் அமெரிக்காவில் வசித்து வருகின்றனர். அவரைச் சந்தேகத்தின்பேரில் விசாரித்த போது கிளிநொச்சி சென்று தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் உள்ளிட்ட புலிகளின் தலைவர்களைச் சந்தித்துள்ளதாகக் கூறியுள்ளார் என்று பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் தடையின்றி நுழைவதற்காக சு.ப.தமிழ்ச்செல்வன் கையெழுத் திட்டுக் கொடுத்த கடிதம் ஒன்றையும் கைப்பற்றியிருப்பதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (து)

# ஜனாதிபதி சட்டத்தரணிகளாக 9பேர் சத்தியப்பிரமாணம்

(கொழும்பு)

ஜனாதிபதி சட்டத்தரணிகளாக 9 பேர் நேற்று சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர். கொழும்பு உயர் நீதிமன்ற கட்டடத் தொகுதியில் இச் சத்தியப்பிரமாணம் நடைபெற்றது.

இந் நிகழ்வில் சட்டம் மற்றும் அரசியல் துறையைச் சேர்ந்த பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

இவர்களில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிரேஷ்ட சட்டத்தரணி செல்வி சாந்தஅபிமன்யு சிங்கமும் ஜனாதிபதி சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். (ந-5)

# கற்கை நெறிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

2006/ 2007 கல்வியாண்டுக்கான பட்டப்பின் படிப்பு கல்வி டிப்ளோமா பாடநெறி வவுனியா வளாகத்திலும் குடித்தொகை அபிவிருத்தி கற்கைநெறி முதுமாணி யாழ்.பல்கலைக்கழகத்திலும் எதிர்வரும் 15 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளன.

இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த பிரதேச திட்டமிடலுக்கான முதுமாணி கற்கைநெறி, அபிவிருத்திக் கல்விக்கான முதுமாணி கற்கைநெறி (தமிழ் மொழி மூலமும் ஆங்கில மொழி மூலமும்) நூலகத் தகவல் விஞ்ஞானத்திற்கான பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பகுதி ii ஆகிய கற்கை நெறிகளுக்கான விரிவுரைகள் இன்றுமுதல் வழமையான நேர அட்டவணைப்படி நடைபெறவுள்ளதாக யாழ்.பல் கலைக்கழக உயர் பட்டப் படிப்புகள் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் கந்தசாமி தெரிவித்துள்ளார். (து-133)

# சங்கானையில் சிப்பாய் தப்பியோட்டம்

(யாழ்ப்பாணம்)

சங்கானை நிச்சாமம் பகுதியில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவ சிப்பாய் ஒருவர் தப்பியோடியுள்ளார்.

தான் வைத்திருந்த துப்பாக்கி மற்றும் சீருடை என்பவற்றை அவ்விடத்திலேயே கைவிட்டு அவர் தப்பியோடியுள்ளார்.

நேற்று முன்தினம் நிச்சாமம் வயல் வெளிப் பகுதியில் அவை கண்டு பிடிக்கப்பட்டதையடுத்தே குறித்த சிப்பாய் தப்பியோடியுள்ளமை தெரியவந்துள்ளது. இதையடுத்து அப்பகுதியை சுற்றிவளைத்து படையினர் தேடுதல் நடத்தினர். (ந-5)

# ஈழத்...

இந் நிலையில் எவ்வாறு மக்களிடம் ஒற்றுமையை எதிர்பார்க்கலாம் என தங்கர் பச்சான் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நடைபெறுகின்ற போரை அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளிற்குமிடையிலான போராகப்பார்க்காமல் மனிதாபிமான அடிப்படையில், இலங்கைத் தமிழர்களின் வாழ்க்கையை மீட்டெடுக்க தமிழக மக்கள் ஒன்றிணைய வேண்டுமெனவும் இயக்குநர் தங்கர் பச்சான் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ந-5)

# மங்கள சமரவீர சீனா பயணம்

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர சீனாவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

சீனா வெளிவிவகார அமைச்சர் லிசயோக்சிங் விடுத்துள்ள அழைப்பை ஏற்று எதிர்வரும் 12 ஆம் திகதி இவர் சீனா செல்கின்றார்.

மொரிசீயஸ் வெளிவிவகார அமைச்சர் மதன் முரளீதர் டல்லுவும் நாளை 9 ஆம் திகதி சீனா பயணம் மேற்கொள்வதாக சீனா வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஜியாங் யூ தெரிவித்தார். (து)

# அம்பாறையில்...

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இச் சந்திப்பு பாவட்டா மாவட்ட செயலகத்தில் நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் நடைபெற்றது. இச் சந்திப்பில் அம்பாறை மாவட்ட படையணிப்பொறுப்பாளர் மதுரகவி உடும்பன்குள அரசியல்துறைப் பொறுப்பாளர் வீரமணி ஆகியோர் பங்கேற்றனர்.

படையினரால் நேற்று முற்பகல் நடத்தப்பட்ட எறிகணை வீச்சுத்தாக்குதல்கள் தொடர்பாகவும் மற்றும் மாவட்டத்தின் ஏனைய விடயங்கள் தொடர்பாகவும் போர்நிறுத்தக்கண்காணிப்புக்குழுவின் கவனத்திற்கு இச்சந்திப்பின் போது எடுத்துக்கூறப்பட்டது. (ந-5)

# சர்வதேச அமைதிப் படை...

'எமது பணி எத்தரப்பையாவது திருப்திப்படுத்துவது அல்ல. போர்நிறுத்தத்தைக் கண்காணிப்பதேயாகும்'

'ஸ்கன்டினேவிய நாடுகள் ஐந்தும் தாம் நினைத்த மாத்திரத்தில் போர்நிறுத்த உடன்பாட்டில் மாற்றங்களைச் செய்து விட முடியாது. ஆனால் நாமாகத்தீர்மானித்து வெளியேறலாம். அல்லது எமது அரசாங்கங்கள் எம்மை மீள அழைத்துக் கொள்ளலாம். விடுதலைப் புலிகள் கேட்கின்றார்களே என்பதற்காக எம்மால் வெளியேற முடியாது

எனத் தெரிவித்த ஹென்றிக்சன், இலங்கையில் கடந்த கால வரலாற்றைப் பார்க்கும்போது இந்தியஅமைதிப்படையின் வருகைக்குப் பின்னர், இலங்கையின் இன விவகாரத்தில் அமைதிப் படைகளைஅனுப்பும் முடிவுகளை சர்வதேச சமூகம் எடுக்கும் என நாம் நம்பவில்லை.

அதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினர் ஆதரவு தரப்போவதுமில்லை' என்றும் அவர்கூறினார். இதேவேளை கண்காணிப்பாளர்கள் எண்ணிக்கையை அதிகரிப்பது, கவசவாகனங்கள் மற்றும் வெள்ளை நிறம் பூசப்பட்ட படகுகளைத் தருவித்து பணியில் ஈடுபடுத்தும் திட்டம் என்பன கண்காணிப்புக் குழுவிடம் இருப்பதாகவும்,

இது அமைதிப் படையின் வருகைக்கான முன்நடவடிக்கையாக இருக்கலாம் எனவும் ரொய்ட்டர் செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது. (ந-5,6)

# ஜனாதிபதி...

பதவிப்பிரமாணம் செய்து சிறிது நேரத்தின் பின்னரே ஜனாதிபதிக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்குமிடையிலான இந்த சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் சுசந்த புஞ்சிநிலமே பிரதியமைச்சராக பதவியேற்றமை இடம்பெற்றபோது ரணில் விக்கிரமசிங்க அதை அறிந்திருக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. (ந-5)


## தொழிற்பயிற்சி நெறிகள்

வெளிநாடுகளில் இலகுவான முறையில் வேலைவாய்ப்பைப் பெறக் கூடியவாறு 100% தொழில்சார் தொழிற்பயிற்சி அளிக்கப்படும். பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

✪ RADIO, TV AND VIDEO DECK REPAIRING

சகல இன றேடியோ, ரி.வீ., டெக் மற்றும் எலற்றோனிக் உபகரணங்கள், Computer Monitor, Ups, Printer, Scanner என்பன திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும். (காலம் 12 மாதங்கள்)

✪ MOTOR REWINDING AND ELECTRICAL WIRING

சகல இன (f) பான், ரான்ஸ்போமர்கள் றிவைண்டிங் செய்யும் முறை மற்றும் வீட்டு மின்னிணைப்பு Single Phase, Three Phase இணைப்பு முறை என்பன பயிற்சி அளிக்கப்படும். (காலம் 07 மாதங்கள்)

✪ AIRCONDITIONING AND REFRIGERATION

சகல இன குளிர்சாதனப் பெட்டி மற்றும் எயர் கொண்டிசன் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும். (காலம்07 மாதங்கள்)

✪ MOTOR CYCLE MECHANISAM

சகல இன மோட்டார் சைக்கிள், நீர் இறைக்கும் இயந்திரம் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும். (காலம் 06 மாதங்கள்)

✪ MOBILE PHONE REPAIRING (காலம் 01 மாதம்)

மேலதிக விபரங்களுக்கு:- ஆரம்பம்:-14.07.2006(கிழமை நாள் வகுப்புக்கள்)
15.07.2006 (சனி, ஞாயிறு வகுப்புக்கள்)

JAFFNA TECHNICAL INSTITUTE
இல.07, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
Regd. No: 15251 T.P: 021-222 3335







இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.07.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.